விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆடி 3 றம்ழான் 27 இ 56

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19 -7-

உங்கள் வீடுகளை
மலிவாகவும் விரைவாகவும்
கட்ட விரும்புகிறீர்களா?

நேரிலோ, தபால் மூலமோ
உடன் எம்முடன் தொடர்புகொள்க;-

சர்வ வியாபார பொறியியல்
ஒப்பந்த வேலைஸ்தாபனம்

Engineering Contracts and
Syndicate Business Establishment

50, மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(மேலும் விபரம் பக்கம் இரண்டில்)
3901

## விமானக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்தாராம்

(கொழும்பு)

இத்தாலிய விமானக் கடத்தல் தொடர்பாக இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட இலங்கையரான ஈ. எல். பண்டார விமானத்தைக் கடத்த தமக்கு உடந்தையாக இருந்தாரென்று சேபால எக்கநாயக்க பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

விசா இல்லாதமையால் அவர் தன்னுடன் பயணம் செய்யவில்லை என்றும் சேபால தெரிவித்துள்ளார். (வெ)

# கோஷ்டி மோதல்: மூவர் கொலை

## பளைப் பகுதியில் பரபரப்பு;

## பொலிஸ், ராணுவம் விரைவு!

(பச்சிலைப்பள்ளி, சாவகச்சேரி நிருபர்கள்)

**பளையைச் சேர்ந்த மாசார், பேராலை. சோரன்பற்று கிராமங்களிலுள்ள இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் மூவர் படுகொலை செய்யப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர்!**

இச்சம்பவத்தில் தேநீர்க் கடையொன்றும், வீடும் தீக்கிரையாகின. ஆளியவளை பஸ் வழி மறிக்கப்பட்டு பிரயாணி ஒருவர் பலமாகத் தாக்கப்பட்டார். பஸ் கண்ணுடிகள் நொருக்கப்பட்டன. இக் கிராமங்களுக்கு, பொலிஸாரும் இராணுவத்தினரும் விரைந்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களாக இவ்விரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதல் நேற்றுக்காலை உச்ச நிலையை அடைந்தது. இக்கிராமங்களில் தொடர்ந்து பதற்ற நிலை இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இக்கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச்சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு புதுக்காட்டுச் சந்தியிலுள்ள மணியம் என்பவரின் தேநீர்க்கடையொன்று தீக்கிரையானது. இதன்பின்னர் பேராலையில் உள்ள வீடொன்றும் தீக்கிரையாகின.

### பஸ் மறிக்கப்பட்டது

நேற்றுக்காலை புதுக்காட்டுச் சந்தியில், ஆளியவளை பஸ் ஒருகோஷ்டியினரால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டதாகவும், பஸ்ஸிலிருந்த கனகு என்பவர், வெளியேற்றப்பட்டு பலமாக்கத் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### தந்தை, மகன் கொலை

நண்பகல் 12 மணியளவில் பயங்கர ஆயுதங்களுடன் பேராலைக்குச் சென்ற ஒரு கோஷ்டி சின்னையா பொன்னையா என்பவரை வாளால் வெட்டியதாகவும், அவரது மகனை கிளிநொச்சி பாதுகாப்பு உத்தியோகத்தர் கணேசானந்தன் துப்பாக்கியால் சுடப்பட்டார் என்றும் இச்சம்பவத்தில் இருவரும் மரணமானர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இதேசமயம் வீட்டிலிருந்த பொன்னையாவின் மனைவியின் கை ஒன்று துண்டிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சோரன்பற்று வீதியில் இளைய தம்பி கணேசு என்பவர் பலத்த வாள்வெட்டுக்கு இலக்காகி பலியாகியுள்ளார்.

ஆறியவளை பஸ்ஸில் வந்தபோது தாக்கப்பட்ட கனகு என்வரும் ஆபத்தான நிலையில் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நூலக நிதிக்கு சுவர்ணமுகி நடன நிகழ்ச்சி!

### இன்று நடைபெறுகிறது



(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டின் ஆஸ்தான நர்த்தகியான சுவர்ணமுகியின் நடன நிகழ்ச்சி இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. யாழ். பொது நூலகநிதிக்காக இந் நிகழ்ச்சி இடம்பெறுகிறது

அகில உலக இந்து மாநாட்டில் அவரது நிகழ்ச்சியின் போது சபை ஆரவாரமாக இருந்தது. அதன் பின்னர் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் மண்டபம் நிரம்பி வழிந்தது.

இப்போது மீண்டும் யாழ். நூலக நிதி உதவிக்காக அவர் இங்கு வந்திருக்கிறார். கடந்த வெள்ளிக்கிழமை பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்திலும், நேற்றுமுன்தினம் வவுனியாவில் பண்டாரவன்னியன் சிலை திறப்புவிழாவிலும் நிகழ்ச்சி அளித்தவர், இன்று மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலேமுதன்முதலாக தனது நிகழ்ச்சியை அளிக்கப் போகிறார்.

(6-ம் பக்கம் பார்க்க)

### 'நிருத்த சாகரம்' பட்டமளிப்பு

[நல்லூர்]

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் தமிழ் நாடு ஆஸ்தான நர்த்தன கலைமாமணி குமாரி சுவர்ணமுகிக்கு 'நிருத்த சாகரம்' என்ற பட்டத்தை அளித்து கௌரவித்துள்ளது.

யாழ்ப்பாணம் வருகை தந்த அவருக்கு நேற்றுமாலை அளிக்கப்பட்ட வரவேற்பில் இந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற செயற்குழு உறுப்பினர் திரு. செ. தங்கராஜா

[8-ம் பக்கம் பார்க்க]

## கோரமில்லை: தமிழ் காங்கிரஸ் செயற்குழு கூடவில்லை!

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் கோரமின்மையால் நேற்று முன்தினம் நடைபெறவில்லை.

தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவில் 54 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் குறைந்தது 18 பேர் செயற்குழுக் கூட்டத்தை நடத்தலாம் என்று கட்சியின் விதி கூறுகிறது.

நேற்று முன்தினம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் 12 செயற்குழு உறுப்பினர்களே சமுகமளித்திருந்ததால் கூட்டத்தை நடத்த முடியவில்லை என்று கட்சித் தலைவர் திரு எஸ். ஆர். கனகநாயகம் தெரிவித்தார்.

கட்சி செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் சுகவீனம் காரணமாக இக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை எனத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (மா)

## வான்மீது குண்டுவீச்சு! ஒருவர் படுகாயம்!

### மீனவர்பிரச்னை எதிரொலி?

[மன்னர்]

மன்னரிலிருந்து பேசாலை சென்று கொண்டிருந்த வான் ஒன்றை எழுத்தூர் சந்தியில் 10 பேர் கொண்ட கோஷ்டி மறித்தபோது வான் சாரதி மறிக்காமல் சென்றதால் வான் மீது பெற்றேல் குண்டுகள் வீசப்பட்டன இச்சம்பவத்தில் ஸ்ரனிஸ்லோஸ் என்பவர் படுகாயமடைந்ததுடன் வானும் பலத்த சேதத்துக்குள்ளானது

சம்பவத்தின்போது வானில் மன்னர்மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு கயஸ் பெல்டானு மன்னர் வைத்திய அதிகாரி திரு. இம்மனுவேல் பீரிஸ் ஆகியோரும் பயணம் செய்தனர்.

பேசாலை கிராமோதய சபைத்தலைவர் திரு அல்பிரட் குலாஸுக்குச் சொந்தமாந் இந்தவான் இரவு பதினென மணியளவில் எழுத்தூர் சந்திக்கு வந்தபோது பற்றையில் மறைந்திருந்த கோஷ்டியினர் மறித்ததாக கூறப்படுகிறது.

சாரதி வானை மறிக்காமல் செல்லவே அக்கோஷ்டியினர் கற்களால் எறிந்ததுடன், பெற்றேல் குண்டுகளையும்வீசியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மன்னர் பேசாலை, தாழ்வுப்பாடு மீனவர் பிரச்னை தொடர்பாக கடற்றெழில் ஆணையாளர் திரு தாமசேகர முன்னிலையில் நடந்தவிசாரணையில் சாட்யமளித்த பின்னர் ஸ்ரானிஸ்

[8-ம் பக்கம் பார்க்க]

## "சிறிமா ஆட்சிப்பொறுப்பை ஏற்றல் மக்கள் கிளர்ந்தெழுவர்!"

### அமைச்சர் 'ரெனி' எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

"அடுத்த ஆண்டிலிருந்து நாட்டிலுள்ள 24 மாவட்டங்களுக்கும் ஒரேயளவான நிதி ஒதுக்கப்படும். அந்தந்த மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்டசபைகள்மூலமேமேற் கொள்ளப்படும்".

இவ்வாறு நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரெனி டிமெல் நேற்றுமுன்தினம் காத்தான் குடி இலங்கை வங்கிக்கிளை வைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறிபதாவது!

"இந்த நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மாத்திர மன்றி, அன்றாட வாழ்க்கைச் செலவுகளுர்கும் வெளிநாட்டு உதவியையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

"மீண்டும் சி மாவோ ஆட்சிப் பொறுப்பை ஏற்றல்வெளிநாடுகள் இந்த நாட்டிற்குநிதி உதவியளிக்க முன் வர மாட்டாது இதனல் மக்கள் பசி, பட்டினியால் ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழுவார்கள். அவர்களால் ஆறுமாதம்கூட ஆட்சியை நடத்தமுடியாது. ஆறு மாதத்தில் ஒரு புரட்சியே ஏற்படும்.

"1971ம்ஆண்டுபோல் இரத்தக்களரியே ஏற்படலம். மீண்டுமொரு இரத்தக்களரிக்கோ, கலவரத்திற்கோ இடம்கொடுக்காது நாட்டை பொருளாதாரத் துறையில் கட்டியெழுப்புவதற்கு ஐ தே. சட்சியால்தான் முடியும்" என்றர். (வெ)

## ஆளும் கூட்டணி வெற்றி

லண்டன், ஜூலை. 18

பிஜிதீவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் கூட்டணிக்கட்சி வெற்றிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி – சுன்னுகத்தில் காங்கேசன்துறை வீதியிலுள்ள ஜெயம் ரியூட்டரி எதிரொழுங்கையில் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு திருமதி சிவகுமாரன், குட்டியாண்டிவளவு, ஜயனுர் வீதி, சுன்னுகம். 3914

மினி வானுக்குரிய ஆசனங்கள், பழைய மாடல் வீட்டு செற்றி செட்டுகளும் விற்பனைக்குண்டு. சி. எஸ். கே. மில், யாழ்ப்பாணம். 3892

நல்ல நிலையிலுள்ள ஒரே பாவிப்பிலிருந்த Datsun Sunny 6ஸ்ரீ ஆறுயிரம்தொடர் இலக்க கார் விற்பனைக்குண்டு. டில்கா பேணிச்சர் பலஸ், 234, 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8186. 3878)

நல்லின அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: சேவியர். ஆறுகால்மடம், சங்கக்கடைக்கு அருகாமையில், ஆனைக்கோட்டை. 3906

மிருசுவில் வடக்கு ரோட்டில் புகையிரத நிலையத்திலிருந்து 1000யார் தூரத்தில், 16பரப்பு காணி நல்ல சுற்றுடலுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: R. யோசப், பொலிஸ் நிலையம், தலைமன்னர். 3905

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி / உடையார் ஒழுங்கைச் சந்தியிலிருந்து 25 யார் தூரத்தில் 2 பரப்புக் காணியிலுள்ள சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. இவ்வாதனம் உடனே பொறுப்பேற்கக்கூடியதும், (Vacant Possession), யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம், கோண்டாவில் புகையிரத நிலையம், தபால் அலுவலகம் முதலியவற்றிற்கு அண்மையிலுள்ளது. தொடர்புகொள்ளவும்: மா. ஞானசுந்தரம், பொற்பதி வீதி, கொக்குவில். 3918

கோப்பாய் தபாற் கந்தோருக்கு மேற்குப் பக்கமாகப் பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும், தோட்டம்செய்யவும் வசதிகள் உண்டு. பகுதியாகவும் வாங்கலாம். கந்தையா நாகராசா, (சங்கக் கடை அண்மையில்) பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 3896

நல்ல நிலையில் இயங்கும் இப்பீறியல் தட்டச்சு (ஆங்கிலம்) இயந்திரம் விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புவர் பருத்தித்துறை சென்றல் படமாளிகையில் திரு. கே. இராமநாதன் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 3900

### காணவில்லை

திருக்கோயிலைச் சேர்ந்த கந்தசாமியின் 10 வயது மகள் விமலாதேவி (அழைப்புப் பெயர் தேவி) யாழ்ப்பாணத்துக்கு வந்த நிலையில் 17–ம் திகதி காலையிலிருந்து காணவில்லை. உயரம் 2 – 2½ அடி. பொதுநிறம், நீலநிறப் புள்ளிகள் கொண்ட வெள்ளைச் சட்டை அணிந்து காணப்பட்டார். இச்சிறுமியை யாராவது கண்டால் அல்லது இருக்கும் இடம் தெரிந்தால் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அல்லது கீழுள்ள விலாசத்துக்குத் தெரிவிக்கவும். திரு. செ. வாசுதேவன், 36, யாழ். ரோட், யாழ்ப்பாணம். உதவுவோருக்குச் சன்மானம் வழங்கப்படும். 3919

## யாழ். மாநகரசபை இரு புதிய உறுப்பினர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை கூட்டணி உறுப்பினர் திரு. எம். சுந்தரலிங்கம் ராஜினுமா செய்ததைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு நல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. கே. சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டத்தரணி ஜீனுப் இமாமின் இடத்துக்கு சுண்டுக்குளி வட்டாரத்தைச் சேர்ந்த திரு. சூசைப்பிள்ளை சிறில் நியமனம் பெற்றுள்ளார்.

## "பண்டாரவன்னியன் சுதந்திர உணர்வுடன் செயல்பட்டவன்"

[வவனியா]

வன்னி மாவட்ட தனி அரசனுக தன் நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதற்குச் சுதந்திர உணர்வுடன் செயல்பட்டவன் பண்டார வன்னியன். மன்னர், முல்லைத்தீவு, வவுனியா பிரதேசங்களை அடக்கித் தனி இராஜ்யமாக வைத்திருந்தவன் மட்டுமன்றி வீர புருஷனுக செயல்பட்டதை வரலாறு மூலம் நாம் அறிவோம்.

இவ்வாறு வவுனியா மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. எம். சிற்றம்பலம் கூறினுர்.

பண்டார வன்னியன் நினைவுச் சொற்பொழிவுகள் என்ற விடயத்தின்கீழ் வவுனியா நகராண்மைக் கழக மண்டபத்தில் நகரசபைத் தலைவர் திரு. ஐ கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சிற்றம்பலம் மேலும் கூறியதாவது: மக்களின் பெரும் மதிப்பை பெற்ற இந்த மண் பெற்று எடுத்த தவப் புதல்வன் மாவீரன் பண்டார வன்னியனுக்கு அரசு இவ்வளவு காலமும் சிலை எடுக்கத் தவறிவிட்டது.

இப்பகுதி கடைசி வீரமன்னனுக திகழ்ந்தவன். ஆனுல் சிலர் மாவீரனுடைய சரித்திரத்தை மாற்றும் விதத்தில் ஆவேசத்தை ஏற்படுத்த முயன்று வருவதை நாம் காண்கின்ருேம்.

இங்கு வாழும் ஏழைப்பாட்டாளி மக்களும் பூரண ஆதரவு இந்த சிலை நிறுவ தந்துள்ளனர் என்ருர்.

இவ்வைபத்துக்கு தலைமை வகித்த திரு. ஐ கேதீஸ்வரன் தனது உரையில்:–

இலங்கையின் ஆறு மாவட்டங்களை அந்நிய ஏகாதிபத்தியத்தினர் கைப்பற்றிய போது வன்னி மாவட்டத்துக்காக இறுதிவரை சுதந்திர உணர்வோடு போராடினுன் பண்டாரவன்னியன்.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சிவ. பத்மநாதன் ''வன்னியர் வரலாறு'' என்ற ஆய்வுரை நிகழ்த்தினுர்.

மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு வை. சிற்றம்பலம் நன்றிஉரை ஆற்றினுர்.

ராஜினுமாச் செய்திருந்த திரு. சுந்தரலிங்கம் விசேஷ சேவை அலுவலராக நியமனம் பெற்றுள்ளார். (மா)


### எமது ஸ்தாபனத்தின் இன்னுமொருசேவை

உங்களிடம் தேவையற்ற அல்லது தேவைக்கு அதிகமாக உள்ள எல்லாவிதமான புதிய அல்லது பாவித்த பொருட்களை

25-07-82 மு. ப. 10-00 மணிக்கு நடக்கும் ஏல அல்லது மலிவு விற்பனை மூலம் விற்றுப் பணமாக்கித் தருவோம்.

உங்கள் பொருட்களின் பெயர்ப்பட்டியலை 21-07-82 க்கு முன் எமக்கு அனுப்பவும்.

மேலும் விபரங்களுக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

ENGINEERING CONTRACTS AND SYNDICATE BUSINESS ESTABLISHMENT,

50, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

3902


### அதிஸ்ட லாபச் சீட்டு முடிவுகள்

அளவெட்டி, கணேஸ்வர அம்பாள் ஆலய [illegible] கட்டிட நிதிக்காக 17-7-82 ல் அதிஸ்டம் பார்க்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 720 | (10) | 1607 | (19) | 2239 |
| (2) | 1702 | (11) | 2202 | (20) | 1964 |
| (3) | 2496 | (12) | 1916 | (21) | 2216 |
| (4) | 533 | (13) | 1810 | (22) | 274 |
| (5) | 2486 | (14) | 2501 | (23) | 1910 |
| (6) | 1534 | (15) | 1438 | (24) | 423 |
| (7) | 376 | (16) | 681 | (25) | 351 |
| (8) | 78 | (17) | 1471 | (26) | 2781 |
| (9) | 2580 | (18) | 241 | (27) | 2432 |

ஆலய நிர்வாக சபைக்காக

செயலாளர் — சி. செல்லத்துரை

தலைவர் — சி. கந்தசாமி

3917

### நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல: ஈடு / 3589

1. கந்தையா கைம்பெண் இராசம்மா
தெல்லிப்பழை கிழக்கு. — வழக்காளி
எதிராக
2 முத்தையா இராசையா,
மாங்கொல்லை, காங்கேசன்துறை — எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1982–ம் ஆண்டு ஆவணி மாதம் 19–ம் திகதி [19–08–82] வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 3828/–வும் மேலும் 3000/– வருடமொன்றிற்கு நூற்றுக்கு இருபது வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1980–ம் ஆண்டு சித்திரை மாதம் 3–ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1981–ம் ஆண்டு சித்திரை மாதம் 2–ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான. வருடமொன்றிற்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 2579-90. (இதில் நடைபெற்ற செலவு ரூபா 1477–10. நடைபெறவேண்டிய செலவு ரூபா 555–50. மேலதிக சமயா சமய செலவு ரூபா 547–30) கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

#### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று வீமன்காமம் இறை 'செக்கரியம் கலட்டி' நில. பர. 30–ம் வேம்பும், பனைகளும் மற்றும் வான்பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு: சரவணமுத்து சுப்பிரமணியத்திற்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு: ஒழுங்கை, மேற்கு: வன்னித்தம்பி சோமசுந்தரத்திற்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு: அருணுசலம் சினிசித்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலில் சொரியலாய் மூன்றிலொன்றும் (1/3) அதற்குரியவைகளும்.

சி. ஆ. த. வடிவேலு, ஜே. பி.
L. I. V., S. C. V.,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

'வடிவேல் உதயம்',
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில். 26–6–82. 3897

## இன்றைய பலன்

ஆடி மாதம் 3–ம் திகதி
திங்கட்கிழமை
(19—7—82)

மேடம்: புதிய நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள். பொருள் வரவுக்கும் இடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும். சிறப்பான நாள்.

இடபம்: பலவித சிந்தனைகளால் தாக்கப்படுவீர்கள். உடல் நலனும் சிறிது பாதிக்கப்படலாம். திரைமறைவில் மோசடி நடக்கும். நம்பிக்கையின் மூலம்பணம் விரயமாகும். துக்க தினம்.

மிதுனம்: கண்துடைப்பு வேலை நடைபெறும். வீட்டில் சிறிய பூசல் தலை தூக்கலாம். எந்த விடயத்திலும் நன்ருக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும். ஆணவத்தை அடக்கவும்.

கடகம்: சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள். இல்லத்தில் அமைதி நிலவும். பூமியால் இலாபமுண்டு. பேச்சுவன்மை வெற்றி அளிக்கும்.

சிங்கம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கு இடமுண்டு.

கன்னி: நினைத்தகாரியத்தில் வெற்றியுண்டு. எதிர்பாராத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும். பகைத்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள். சிறப்பான தினம்.

துலாம்: காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார் உங்கள் சீரிய நோக்கம் எங்கும் சிறப்பைத் தேடித்தரும். தானதருமங்களில் விருப்பம் மேலிடும்.

விருச்சிகம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும். உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களை பகைத்துக் கொள்ள நேரிடும்.

தனு: களத்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு. வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும். இணைந்த இதயங்கள் இன்பத்தில் மிதக்கும். சுப தினம்.

மகரம்: தொல்லைகள் அலைமோதும். மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள். குடும்பத்திலும் சிறு பிணிக்கு இடமேற்படலாம். நண்பர்களை நம்ப வேண்டாம். போதைப் பொருளைத் தவிர்க்கவும்.

கும்பம்: உழைப்பின் வெற்றிக்கு இன்று உறுதியளிக்கப்படுகிறது. அதிக பிரயாசையின் மூலம் ஆதாயத்தைத் தேடுவீர்கள். பரோபகாரச் சிந்தைமேலிடும். சுற்றுடலில் நிலைமை சீரடையும்.

மீனம்: அருளும் பொருளும் இன்று இணைந்து கிடைக்கும். தொழில் துறையில் ஏற்படும் போட்டியில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும். நீண்ட பயணத்தை தவிர்க்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பெருங்குளம் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 26ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

கடந்த 12 ஆண்டுகளின் பின் முதல்தடவையாக 9ம் திருவிழா அதன் நிர்வாகிகளால் கொண்டாடப்படவுள்ளது. இத்திருவிழா உபயகாரர்களான டாக்டர் கே. வி. கே. ஜெயச்சந்திரமூர்த்தியும், ஆலய முகாமையாளர் திரு. சி. நாகரத்தினமும் இத்திருவிழாவைச் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஒற்றை

(6–ம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சியன்ற ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், சாதனை வீரருக்கு மாலைசூட்டிக் கௌரவித்தார்.

மேற்படி சனசமூக நிலையத் தலைவர் திரு மு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ் வடபிராந்திய விளையாட்டு அதிகாரி திரு. வி. ரி. சிவலிங்கம், திரு. ஏ. தர்மகுலசிங்கம் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர். (மா)

## பிரிட்டிஷ்

[3–ம் பக்கத் தொடர்ச்சி

ருமாவார். நியுசொஸைட்டி, கார்டியன், நியு ஸ்டேட்ஸ்மன் ஆகிய பிரபல ஆங்கில சஞ்சிகைகளில் கட்டுரைகள் பலவற்றையும் இவர் எழுதியுள்ளார். இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்தியாடுடே', 'இலஸ்ரேட்டட் வீக்லி ஒப் இந்தியா' ஆகியனவற்றிற்கும் இவர் கட்டுரைகளை எழுதுபவராவார். (கி)

# பாலஸ்தீனியருக்கு புகலிடம் அளிக்க

# இஸ்ரேல் தயாராம்!

## நிபந்தனைகளை ஏற்கவேண்டும் என்கிறார்

ரெல் அவிவ், ஜூலை 18

அரபுநாடுகள் பாலஸ்தீனியரை ஏற்க முன்வராத காரணத்தினால் ஒரு சில நிபந்தனைகளுடன் அவர்களுக்கு புகலிடம் வழங்க இஸ்ரேல் தயாராக இருக்கிறது என்று பிரதமர் பெகின் தெரிவித்துள்ளார்.

லெபனானில் இஸ்ரேலியப் படைகளின் முற்றுகைக்கெதிராக, இஸ்ரேலில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்குப் பதிலளிக்கும்வகையில் நடத்தப்பட்ட பெரும்கூட்டமொன்றிலேயே இஸ்ரேலியப் பிரதமர் இதனைத் தெரிவித்தார். இக்கூட்டத்தில் இஸ்ரேலியப் பாதுகாப்பமைச்சர் திரு. ஷரோனும் கலந்துகொண்டார், சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

திரு. பெகின் மேலும் அங்கு பேசுகையில், 'பாலஸ்தீனியர்கள் பெய்ரூட்டிலிருந்து வெளியேறுவதற்கு இஸ்ரேலால் கொடுக்கப்பட்ட காலக்கெடு இன்னும் 30 தினங்களுக்குள் முடிவடைந்துவிடும். ஆனால் இதுவரை எந்தவொரு அரபுநாடும், பாஸ்தீனியரை ஏற்பதற்கு முன்வரவில்லை, எனவே இஸ்ரேலியப்படைகளின் பிடியிலுள்ள பாலஸ்தீனக் கெரில்லாக்கள் எதிர்காலத்தில் தாம் பாலஸ்தீன இயக்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கமாட்டோமென உறுதியளித்தால், வேறு சில நிபந்தனைகளுடன் அவர்களுக்குப் புகலிடமளிக்க இஸ்ரேல் முன்வரும்' என்று தெரிவித்தார். (கி)

## "லெபனான் நெருக்கடி கேம்ப்டேவிட் ஒப்பந்த விளைவுகளே!"

மாஸ்கோ, ஜூலை 19

"லெபனானின் இன்றைய துயரங்கள், கேம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் நேரிடை விளைவாகும். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இரத்தக்களரியில் மூழ்கடிக்கவும் பாலஸ்தீன சுயநிர்ணய உரிமைப் பிரச்னையை நசுக்கவும் இஸ்ரேல் விரும்புகிறது. எனவே இனப்படுகொலையில் அது மூர்க்கத்தனமாக இறங்கியுள்ளது என்று பிராவ்தா விமர்சகர் வி. ஒவ்ஷின்சின்னுகோவ் எழுதியுள்ளார்,

அரபு நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக ஏகாதிபத்தியக்கட்டளைகளுக்கு அடிபணியச் செய்யவேண்டும் என்பதே, காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் திட்டமாகும். 1978ல் கையெழுத்தான காம்ப் டேவிட் ஒப்பந்தம், இஸ்ரேலுக்கு எதிரான அணியிலிருந்து எகிப்தை விலகச் செய்ததில் பாக்தாத் மீது தாக்குதலை நடத்தவும், கிழக்கு ஜெருசலேம் மற்றும் கோலான் குன்றுகளைக் கைவசப்படுத்தவும், லெபனான் தலைநகரான பெய்ரூட்டை அடையவும் இஸ்ரேலுக்கு ஊக்கம் அளித்தது. லெபனான் மீதான ராணுவத் தலையீடு, இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள 'ராணுவ ஒத்துழைப்பு'க்குச் சான்றாகும். லெபனானைக் கூறுபோடவேண்டும் என்பதும், கைப்பற்றப்பட்ட லெபனான் பிரதேசத்தில் 'பல நாட்டுப் படை'களை நிறுத்த வேண்டும் என்பதும், அந்தப்படைகளின் முக்கிய பகுதியாக அமெரிக்கத் துருப்புக்கள் இருக்க வேண்டும் என்பதும். இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் விருப்பமாகும்'' என்று அவர் எழுதியுள்ளார்.

## இஸ்ரேல் வெளியேற வேண்டும் சர்வதேச மாநாடு வலியுறுத்து

சுவிட்சர்லாந்து, ஜூலை. 19

லெபனான், பாலஸ்தீன மக்களது போராட்டத்துடனான சர்வதேசஒருமைப்பாட்டுமகாநாடு லெபனானிலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது,

இரண்டுநாட்கள்இங்கு நடைபெற்ற இச் சர்வதேச படையெடுப்பிற்குப் பின்னர் நடந்த முதலாவது மகாநாடு என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அரசியல் தத்துவார்த்தக் கருத்துக்களையுடையவர்கள், மற்றும் பல்வேறு மதத்தவர்கள்கலந்துகொண்ட இம் மாகாநாடு ''இஸ்ரேல், லெபனானிலிருந்துஉடனடியாக வெளியேற வேண்டும்'' என்று ஏகமனதாக தீர்மானித்தது.

முப்பதுக்குமதிகமான நாடுகளிலிருந்தும் பத்து சர்வதேச நிறுவனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் இம்மகாநாட்டிற்கு வந்திருந்தனர். லெபனானின் தேசிய தேசபக்த சக்திகளினதும், பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் உலக சமாதானக் கவுன்சிலின் தலைவர் ரோமேஷ் சந்திரா, பிரிட்டிஷ் எம். பி, ரோஸ். ஐ. நா. பொதுச்செயலாளரின் பிரதிநிதி சிரியா பாராளுமன்றத்தின் வெளிவிவகாரக் கமிஷனின் தலைவர் மஸாசெட்ஸ் ராஜ்யத்தின் சட்டசபையின் உறுப்பினர் சோண்டா சிரஹாம் இந்திய எம், பி யான ரஷீதின் கான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பினை பின்லாந்து யுவதியான செல்வி பிர்கோ பார்வியனென் இம் மகாநாட்டில் எடுத்துரைத்தார். லெபனான் மீதுஇஸ்ரேல் தாக்கிய போது மயிரிழையில் உயிர் தப்பிய இந்த யுவதி இஸ்ரேலியரின் தாக்குதல் முறைகளைப் பாசிஸ்டுகளுடன் ஒப்பிட்டுபேசினார்

இஸ்ரேலிய அமெரிக்கக்கூட்டுத்தான் மத்திய கிழக்கில் பெரும் நெருக்கடியையேற்படுத்தியுள்ளது. என்று மகாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

# இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவி வழங்கக்கூடாது!

## அணிசேராநாடுகள் கோரிக்கை

நிக்கோஸியா, ஜூலை 18

இஸ்ரேலுக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தவேண்டும் என்று அமெரிக்காவை அணிசேரா நாடுகள் கேட்கவிருக்கின்றன.

மூன்று நாட்களாக பல அணிசேரா நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் கூடி ஆலோசனை நடத்திய பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகளிலேயே மேற்குறிப்பிட்ட கோரிக்கையும் அடங்குகின்றது

இஸ்ரேல் தற்போது பாலஸ்தீனியர்கள் மீதும், லெபனான் மீதும் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின், இராணுவ பொருளாதார, அரசியல் ஆதரவே காரணமாகவிருக்கின்றதென்றும் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

லெபனான், பாலஸ்தீன இயக்கம் ஆகியவற்றினை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்தும் விடுவிக்க அணிசேரா இயக்க நாடுகள் எடுத்துவரும் முயற்சிகளின் ஒரு அங்கமாக, போரினால் பாதிக்கப்பட்ட லெபனானின் பிரதேசங்களைப் பார்வையிடவும் 9 அணிசேரா நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் இப் பிரதிநிதிகளில் இலங்கை, இந்திய வெளிநாட்டமைச்சர்களும் அடங்குகின்றனர். இவர்கள் அடுத்த இரண்டு தினங்களில் போர் அழிவுகளைப் பார்வையிடச் செல்லவிருக்கின்றன.

லெபனானில் இஸ்ரேலிய முற்றுகைக்கெதிராகப் பல தேசப் படைகளைக் கொண்ட சமாதானப்படையொன்றை நிறுத்திவைக்க வேண்டுமென அணிசேரா இயக்கத்தினர் ஐ. நா. பந்தோபஸ்துச் சபையைக் கேட்டுள்ளனர். சமாதானப் படையில் அணிசேரா இயக்க நாடுகளைச் சேர்ந்த படைவீரரும் அங்கம் வகிக்கவேண்டுமென அணிசேரா இயக்கம் மேலும் கேட்டுள்ளது. (கி)

## அ.தி. மு.க.வில்

சென்னை ஜூலை 18

முன்னாள் அமைச்சர் பி, டி. சரஸ்வதி அ. தி. மு க. வில் சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

### ஆர்ஜென்டீனாவில்

## அரசியல் கட்சிகளுக்கு மீண்டும் சுதந்திரம்!

புவனர்ஸ்அயர்ஸ், ஜூலை,18

ஆர்ஜென்டீனாவில் பல வருடங்களுக்குப் பின்னர் அரசியல் கட்சிகள் சுதந்திரமாக இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1976-ம் ஆண்டு பதவியில் இருந்த ஜனாதிபதி மரியா ஸ்டெல்லா பெரோன் இராணுவத்தினரால் ஆட்சியிலிருந்தும் அகற்றப்பட்டு, இராணுவ ஆட்சி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அன்றிலிருந்து ஆர்ஜென்டீனாவிலிருந்த அரசியல் கட்சிகள் யாவும் சுதந்திரமாக இயங்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

ஆர்ஜென்டீனாவின் இராணுவ ஆட்சி, மக்களின் ஆதரவைப் பெருமளவு பெற்றிருக்கவில்லை. அண்மையில் போக்லண்ட்யுத்தத்தில்பெற்ற தோல்வி மக்களிடம் அரசாங்கத்தின் மீதிருந்த சிறிதளவு நம்பிக்கையும் அற்றுப்போகச் செய்திருந்தது இதனையடுத்தே இராணுவ ஆட்சியாளர்கள் மீண்டும் குடிமக்கள் ஆட்சியை நாட்டிலேற்படுத்தும் நடவடிக்கைகளை ஆராய்ந்துவருகின்றனர். இதன் ஒரு அங்கமாகவே அரசியல் கட்சிகள் சுதந்திரமாக இயங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (கி)

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## பிரிட்டிஷ் விரிவுரையாளர் இன்று சிறப்புரை

(யாழ்ப்பாணம்)

''பிரிட்டனின் அரசியல் பிரச்னைகள்'' என்ற பொருளில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி டேவிட் செல்போர்ன் இன்று மாலை நான்குமணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் சிறப்புரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தெற்காசிய கருத்தரங்கு மண்டபத்தில் இச் சொற்பொழிவு இடம் பெறவிருக்கின்றது.

விரிவுரையாளர் டேவிற் செல்போர்ன் பிரபல எழுத்தாளரும், பல நூல்களின் ஆசிரிய

(2-ம் பக்கம் பார்க்க)

# ஏழுலட்சம் கடத்தல்பொருள் சென்னையில் சிக்கியது!

## இலங்கையிலிருந்து கடத்தப்பட்டதாம்

சென்னை, ஜூலை. 18

கடத்தல் பொருட்களைக் கொண்டுசென்ற வான் வண்டியொன்று சுங்கபகுதியினரால் நெடுந்தூரம் துரத்தப்பட்ட பின்னர் கைப்பற்றப்பட்டுள்ளது.

வானிலிருந்தும் கைப்பற்றப்பட்டபொருட்கள் இலங்கையிலிருந்தே கடத்தப்பட்டன. என்றும் இவற்றின் பெறுமதி சுமார் 7லட்சம் ரூபாய்களென்றும் தெரிவிக்கப்பட்டது. கடத்தல் பொருட்களில் ஸ்டீரியோ டேப்ரெக்கோடர்கள், கஸட்டுகள் உட்பட பெருந்தொகையான மின்னியல் பொருட்கள் காணப்பட்டன.

சென்னை சுங்கபகுதியினருக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்தே அவர்கள் வானைத் தேடிச்சென்றனர். ஆனால் கடத்தல் வான் சுங்கப்பகுதியினரிடமிருந்தும் தப்பியோட ஆரம்பித்தது பல மைல்கள் தூரம் அக் கடத்தல் வானை சுங்கப்பகுதியினர் துரத்திச் சென்று இறுதியாக அதன் சக்கரமொன்றுக்கு துப்பாக்கியால் வெடிவைத்தே அதனைக் கைப்பற்றினர். வானில் இருந்தவர்களில் இருவர் கைதாகினர் மூவர் தப்பியோடிவிட்டனர். (கி)

## "ஈரானிய படைகளுக்கு ஈராக் அஞ்சவில்லை"

### - ஜனாதிபதி சதாம்ஹுசைன்

பாக்தாத், ஜூலை 18

'ஈரானியப் படைகளுக்கு அஞ்சி ஈராக் போர் நிறுத்தத்தை அறிவிக்கவில்லை எதிர்வரும் செப்டம்பர் மாதம் பாக்தாத்தில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தும்பொருட்டே படைகளை விலக்கிக்கொள்ள ஈராக் முன்வந்தது.'

இவ்வாறு ஈராக்கிய ஜனாதிபதி ஜனாப் சாதம் ஹுசைன், ஈராக் தேசிய தினத்தையொட்டி விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஹுசைன் மேலும் தமது செய்தியில்; சில சக்திகள் அரபுநாடுகளுக்கிடையேஒற்றுமையின்மையை தோற்றுவிக்க முயலுகின்றன. இதனை முறியடிக்க சகல அரபுநாடுகளும் ஒன்றிணைந்து ஈடுபடவேண்டும். அத்துடன் ஒன்றையொன்று பாதுகாத்துக்கொள்ளவும் வேண்டும் எனத்தெரிவித்துள்ளார் அதேவேளை பஸ்ரா' நகரத்திற்கு அண்மையிலுள்ள நீர்ப்பாதையொன்றினூடாக ஈராக்கிய துப்புக்கள் கடும் தாக்குதல் ஒன்றை ஈரானியப்படைகள் மீது ஆரம்பித்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இருதரப்பிலிருந்தும் வெளியாகிக்கொண்டிருக்கும் சில தகவல்கள் பெரும்பாலும் உண்மையானவைகளாகக் காணப்படவில்லை. (கி)

## கடன் வசூல்

(சாவகச்சேரி)

பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கடன் பெற்றவர்கள் பலர் கடந்த 1-ம் திகதி தமது கடனைச் செலுத்தினர்.

ஒரே நாளில் மீட்கப்படாத கடனிலிருந்து ரூபா 10,000 வசூலிக்கப்பட்டது.

பளை சுற்று நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் இக் கடன் வழக்குகள் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டன (அ

### மணிவாக்கு

காப்பவிழ்ந்த தாமரையோகழுநீர்மலர்த்தொடையோ?
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த 'மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பிய கைக்காந்தளடி கோமகனர் வேண்டுவது.

— விபுலாநந்த அடிகள்.

# நமது நோக்கு

## என்றும் மூன்றும் உலகமா?

இரண்டாவது உலகமகா யுத்தம் உலகில் இனிமேல் யுத்தம் நடவாது தடுக்கும் யுத்தம் எனக்கூறப்பட்டது; அந்தக் கூற்றில் இயல்பாக உள்ள முரண்பாட்டைக் கவனிக்கும் விவேகம் எவருக்கும் உண்டு.

மூன்றாவது உலக யுத்தம் ஒன்று மூண்டுகொண்டிருப்பதாகச் சிலகாலம் கருதப்பட்டு வருகிறது ஆனல் எமது சிந்தைக்குரியவிடயம் வேறொன்று. இரண்டாவது உலக யுத்தத்தின் பின் நடைபெற்ற போரும்பிணக்கும – ஒவ்வொன்றும்- மூன்றும் உலக நாடுகளிலேயே இடம் பெற்றிருக்கின்றது.

இதற்கு மறைமுகமாக வல்லரசுகள் உதவுகின்றன வென்பது உலகறிந்த விடயம்; இன்றும் ஒருஉலகயுத்தம ஆயுதமாகுது என்ற அளவில் வல்லரசுகளின் ஆயுத உற்பத்தியும் உலக விவகாரங்களில்துரிதப்பட்டு தலையிடும் வேகமும் உணர்த்துகின்றன.

இன்று இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் மெக்ஸிக்கோ முன்னைநாள் ஜனாதிபதி லூயி அல்வாறஸ் அவர்கள் மூன்றும் உலக நாடுகளின் அவலநிலைபற்றி தெளிந்த கருத்துக்களை வழங்கியிருக்கிறார்.

மூன்றும் உலக நாடுகளின் அரசியல் சுதந்திரம் அர்த்தமற்றநிலையில் நெடுங்காலமிருக்க போகிறதென்று அச்சம் தெரிவித்திருக்கின்றார்.

அவருடைய அச்சத்திற்கும் அந்நாடுகளைப்பற்றிய அசாதாரண சிரத்தைக்கும் அடி அத்திபாரமாகவிருப்பது இந்த நாடுகளின் பழம் பெரும் பண்பாடுகளே!

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் புராதன கலை, கலாசாரம் எந்த வறுமை நிலையிலும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய அருஞ்செல்வங்கள் என்பதுஇப்பெரியாரின் கருத்து.

இதனை ஒப்புக்கொள்ளத் தயங்குபவர் எங்கள் நாட்டின் இன்றைய பொருளாதாரப் புரட்சியில் மேல் மட்டத்தில் வாழும் அதிர்ஷ்டம் படைத்த சிலரே.

பழைய பண்பாட்டுச் சிறப்பும், இன்றைய வாழ்க்கையில் வறுமையுமே இந்த நாடுகளின் சிக்கலான நிலைமை.

தொழில்நுட்ப முன்னேற்றத்தால செல்வ வாழ்வு வாழும் வசதி படைத்த செல்வந்த நாடுகள் அனைத்தும், மூன்றும் உலக நாடுகளைச் சுரண்டி உயர்ந்தவைகளே!

அடிமைத்தனம் நீங்கிய நிலையிலும், வறுமையை விரட்ட செல்வந்த நாடுகளின் உதவி தவிர்க்க முடியாத தேவை; ஆயினும் செல்வந்த நாடுகள் அனுதாப மனப்பான்மையுடன் இத்தகையஉதவியைவழங்க முன்வரும் சாத்தியமில்லை.

உதவி வழங்காத நிலையிலும், மூன்றும் உலக நாடுகளில்உள்ளமூலப்பொருட்களுக்கு தக்க விலைகொடுத்து வாங்கும் மனப் பண்பும் காணப்படவில்லை.

செல்வர்கள்தம் இனத்தை நாடுவதுபோல், வடக்கு செல்வநாடுகள் இவ்விடயத்தில் ஒற்றுமைப்பட்டிருப்பது கண்கூடு

தங்கள்தங்கள் உயர்ச்சியை அதிகரிப்பதில் கண்ணும் கருத்துமாயிருப்பதைவிட, மூன்றும் உலக நாடுகள் தலையெடுத்தால் தங்களின் பல நூற்றாண்டுகாலச் செல்வாக்கு 'பறந்து'போமென்ற அச்சம் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருக்கிறது.

இந்த அபாயத்தை முன்னுணர்வாகக்கொண்டே அணிசேரா நாடுகளின் தத்துவத்தை பெரியார்கள்— காலஞ்சென்ற மாஷல் றிற்ரோ— பிரதமர் நேரு— நாசர்— நன்கு விளக்கியிருந்தனர். அணிசேராக் கொள்கை பலவித இன்னல்களுக்குள்ளாகும் எந்தநிலையிலும் ஒற்றுமையே இன்றியமையாததென்று அம்மும்மூர்த்திகள் அடித்துக் கூறினர். அழகிய பெண்ணின் கற்பு நிலைமைக்கு இந்தக் கோட்பாட்டை ஒப்பிடுவது சாலப்பொருத்தம்.

இந்த ஒற்றுமைக்குப் பங்கம் பட்டினி வாழ்விலிருந்தே உதயமாகும். பசி வரப் பத்தும் பறக்கும். வறுமையில் உலரும் நாடு செல்வந்த நாடுகளை சார நிர்ப்பந்தம் ஏற்படும்; இவ்வாறு அணிசேரா இயக்கம் பலவீனப்பட்டால் ஒரு புதிய சர்வதேச பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவது கடினமாகும்.

செல்வந்த நாடுகளின் போக்கைக் கட்டுப்படுத்தி அவர்களின் பாதுகாப்பான பொருளாதாரக் கொள்கையை நெகிழ்வித்து உலகின் பொதுப்பொருளாதார நிலையில் செங்குத்தான ஏற்றம் தாழ்வு இல்லாத நிலைமை ஏற்படுத்த ஒரு பலமான இயக்கம் நிலைத்திருக்க வேண்டும். பெரும்பான்மையாக்களின் இயக்கம் இது.

செல்வந்த நாடுகளின் டாம்பீக வாழ்வை பெரிதென்று மதியாமல் அபிவிருத்தியென்றால எங்கள் கலாசாரத்துக்கும், பண்பாட்டுக்கும் அமைய எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களை நாமே உருவாக்கவேண்டும்.

இத்தகைய பணிக்கு பகைவர்களாய் உள்ளவர்கள் அணிசேரா நாடுகளில் உயர்மட்டத்தில் வாழும் 'பிரபுக்களே'. இவர்களை இனங்காண்பது சுலபமானது! வேகமாக விரையும் அலங்காரக்காரில் அவர்கள் இருந்து போகும் பாங்கு போலும்.

எங்கள் நாட்டில் இன்று செல்வர், வறியர் என்ற இடைவெளி அதிகரித்துக் கொண்டு போவதற்கு இன்றைய பொருளாதார நிலையே முக்கிய காரணம். வெளிநாட்டுக்கடனில் ஓடும் ஆட்சி உருவாக்கிய அவல நிலை இது.

செல்வந்தர்க்குரிய தொழில், வர்த்தகம், வியாபாரக் கொள்கைகள் மற்றவர்களை மதிப்பில்லாத மக்கள் என்ற நிலைக்குத்தள்ளி விடுகிறது.

மெக்ஸிக்கோ முன்னைநாள் ஜனாதிபதி விடுத்த எச்சரிக்கை எங்கள் நாட்டுக்கு மிகப் பொருத்தம்.

திருகோணமலையை எவருக்கும் பரிசாக அளித்து, நீண்டகாலம் கடன் வாழ்வில் எங்கள்நாட்டை அடகு வைத்தால் எங்கள் வருங்காலச் சந்ததியினருக்கு பெருந் துரோகம் செய்தவராவோம்.

## சுவாமி விபுலாநந்தர் நினைவுதினம் இன்று

# நாவலர்பெருமானுக்குப்பின் தோன்றியதமிழ்ப்பெருந்தகை

இருபதாம் நூற்றாண்டின் ஈழநாட்டுச் சோதியென உயர்திரு. விபுலாநந்தரைச் சிறப்பித்துக் கூறுதல் மிகவும் பொருத்தமாகும்.

தமது வாழ்நாள் முழுவதையும் சமயத்துக்கு அடியுறை செய்த பன்மொழிப் புலவரும், முத்தமிழ் முனிவருமாகிய அடிகளார், தெளிந்த மொழி, சிறந்த நடை, முதலியன வாய்க்கப் பெற்றவராதலினல் சமயத்தையும், மொழியையும் திருத்தியமைப்பதன் மூலம் சமூகத்தை உயர்நிலைபெறச் செய்யும் வல்லமை பெற்றிருந்தார்.

அடிகளாரின் உள்ளத்தில் இருந்து வெள்ளம்போல் வெளிவந்த கவிதைகளையும், உரை நடைச் செல்வங்களையும் பேணிக் காத்து அனுபவித்து உலகுக்கு உபகரிக்கும் உண்மைத் தொண்டை இன்று தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணி புரியும் சான்றோர் உலகம் முதன்மையாகக் கொள்ள முன்வரவேண்டும்.

சிறுவரை நினைந்தும், நண்பரை நினைந்தும், நல்லோரை நினைந்தும், இயற்கையை நினைந்தும், இறைவனை நினைத்தும் அடிகளார் மனமுருகி மெய்மறந்து பாடிய கவிதைகள் பாடுந்தோறும் நம்முள்ளத்தை உருக்கி ஒருமை நிலையை உண்டாக்கும் அமைப்புடையன.

ஈழத் தமிழர்கள் தமிழினைப் பேணிக் காப்பதில் என்றுமே பின்நின்றதில்லை. தமிழே தங்களது உயிரெனக்கொண்டு எத்தனையோ அறிஞர்கள் வாழ்ந்து பெருமை ஈட்டியுள்ளார்கள். இந்வகையில் அறிஞராகவும், ஆராய்ச்சியாளராகவும், கவிஞராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்து தமிழை அழகுறவளர்த்தவர் அருட்டிரு விபுலாநந்த அடிகளாவர்.

தமிழினை அழகு செய்வதே பிறந்ததின் பயனெனை அடிகளார் கருதியதனுற்றான் இல்வாழ்வைத் துறந்து துறவியாகித் தூய வாழ்வு வாழ்ந்து கா

அதன் பயனாக விபுலாநந்த அடிகளார் என்னும் பெயர் தமிழர்களது மனத் தடத்தில் அணையாத சுடராகியது.

தமிழனுக்காக வாழ்ந்த முத்தமிழ் அடிகளாரின் ஊனுடல் மறைந்து பல ஆண்டுகள் போய்விட்டன. ஆனல் அவரது புகழுடல் இன்றும் தமிர்களிடம் சிரஞ்வீ [illegible] விக்கொண்டிருக்கிறது.

அருள் செல்வநாயகம்

### இல்லறத்தானுக்கு இயைந்த சாதனை முறைகள்

சோர நாயகனி னெண்ணமே யுளத்திற்
றோன்றிட வவன்வரற்குரிய
ஆரிருட் பொழுதை நோக்கிய கண்ணள்
அலைவிளாள் பல தொழில் புரியும்
நேர முஞ்சிந்தையைவனையே நினைக்கு
நிலைமையள் நிலைமையை நிகர்ப்ப
ஏருறு மிறைவன் பால் மனஞ்செலுத்தல்
இல்லறத்தார்க்குறு கடனே.

-- சுவாமி விபுலாநந்தர்

### மாவைக்கந்தன் தேர்த்திருவிழா இன்று

# ஐந்து தேர்களின் அளப்பரும் காட்சி

கந்தக்கடவுளே எமது சொந்தக்கடவுள் என்று நாமெல்லாம் வணங்கும்படி கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் முருகப் பெருமான். அன்பர்களுக்கும் சகல உயிகட்கும் எளிதில் அருள்வதற்காக எழுந்தருளியுள்ள விசேடத்தலர்கள் ஆறு படைவீடுகளாகும். இந்த ஆறுபடைவீடுகளுக்குநிகரான பெருமையுடைய இனியதலங்கள் பல இந்தியாவிலும் இலங்கையிலும் முருகன் அருட்பொலிவோடுவிளங்குகின்றன. இத்தகைய அன்பர்க்கினிய தலங்களில் பிரசித்தி பெற்ற தலமாகவுள்ளது மாவிட்டபுரம் கந்தசாமிகோவிலாகும். மாருதப்புரவீக வல்லி என்னும் சோழராசகுமாரி முருகன் அருளபெற்று நிறுவிய இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்து இன்றுவரை முருகனருள் பெற்றோர் எண்ணில்லாதவர் என்பதை இன்றும் ஆலயத்தில் விசேடமாகத் திருவிழாக்களில் பிரத்தியட்சமாகக்காணலாம்.

செந்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகக் கடவுள் என்பது நற்றமிழ்க் கடவுளுக்கு உரிய தனிச்சிறப்பானபெருமையாகும். அருணகிரிநாதருக்கு முன்னும் பின்னும் பலபுலவர்கள் முருகப் பெருமானைத்துதித்து தம்மையும் தமிழையும் வளம் படுத்தியுள்ளார்கள். முருகப் பெருமானைக்குறித்த அப்பாடல்கள் முருகப்பிரானின் அருளை நமக்குத் தெளிவுறக் காட்டும் பூதக்கண்ணாடிகளாகவுள்ளன. இப்படியான பாடல்கள் மாவைக்கந்தன்பேரில் அனேகம் உள்ளன. இப்படியாக உள்ள பாடல்களெல்லால் மாவைத்தலத்தின் பெருமையயும் முருகப்பெருமான் சுலபமாகத்தன் அடியார்கட்கு அருள்புரியும் திறத்தையும் தங்கள் குறைனைந்து முறையிடும் அடியார்களாகிய புலவர்களின் பணிவையும் காட்டும் சொல்லோவியங்களாகவுள்ளன.

1931-ம் ஆண்டு வெளியான மாவைக்கந்தரகவலில் ஒரு பகுதி மாவிட்டபுரச்சோலைகளின் இயல்பையும் ஆலயத்தில் முருகன் எழுந்தருளியிருக்கும் சிறப்பையும் தெளிவான செய்யுளமைப்பில் பாடுகின்றது வாழை வருக்கை, மாவொரு தெங்கு, பூகம், நரந்தம், புகழெழு மிக்சை மாதுளை கன்னல், ஆசினி மருவித்தேம்படு பனை, நலவேம்பொடு, தெங்கு, நாவல், தண்புளி, ஆல் அரசு, ஆத்தி, இலுப்பை, ஆகிய விரவி அழகுறுமாவையில் வீதிகள் மடங்கள் விரையுறு பூங்கா கொடி கோபுரம் கூவல்கள் பாங்குறு கடிமதிற் கோவிற்கடவையின் கண்ணே முழுமதியின் மூவிருமுகனும் செழுமலரன்ன பன்னிருவிழியும், எழின்பயின் மிசையேயெழுந்திருந்தருளலில் நம்மனோர்களுள் தரும் செம்மையினன்றே.

1830ம் ஆண்டு [illegible] சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்மாவைக் கந்தனிடம் பிணியோடு பசி வறுமை சிறிதேனும் எனை வந்து பீடித்த லின்மைவேண்டும் பெருமநின் கதைகளைத் துதிகளைக் கேட்டுமகிழ் பேறுமீந்தருளல் வேண்டும்.. பத்தியுந்தருதல்வேண்டும் பாவியேனாயினும் தீயனேன்பால் அருட் பார்வையைத்தருளல் வேண்டும் என்று பிரார்த்திக்கின்றார்.

இப்படிவணங்கும் புலவர்கட்கும் தூயபக்தர்களுக்கும் புலவர்கட்கும் எளிதில் அருளும் முருகன் மாவையில் வணங்க வாய்ப்பான தினம் தேர்த்திருவிழா நாளாகும். தேர்த்திருவிழாவன்று ஆலயம் மட்டுமன்றி மாவைப்பெரும்

(5ம் பக்கம் பார்க்க)


-- தி. பொன்னம்பலவாணர் -

### "மாவைக் கந்தன் தேர் காணின்"

மன்னுந் தேரி லிவர்ந்தருளி
மாவைக் கந்தன் காட்சியுறின்
முன்னும் பாவ மத்தனையும்
முடுகி யோடு மஃதன்றி
பொன்னும் புகழும் புத்திரரும்
புதிய வீடும் வாகனமும்
இன்னும் பல்வே றுக்கங்கள்
எல்லாம் பெறுவீர் இனிதாக

வை. க. சிற்றம்பலம்

# அஞ்சலி செய்வோம்



ஆசிரியர் அ. சரவணமுத்து அவர்களிடம் நான் நேரடியாக கல்லூரியிலே பயிலாவிடினும், அவரை நன்கு அறியும் சந்தர்ப்பம் இருந்தது. கல்லூரியை விட்டு நீங்கிய பின்னரும் அவ்வப்போது சந்தித்துச் சாவகாசமாக உரையாடியுள்ளேன். பல்லாண்டுகளாய் யாழ். இந்துக் கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியராகத் திகழ்ந்த சரவணமுத்து அவர்கள் மறக்கவியலாத ஒருவர். தாராள மனப்பான்மை கொண்ட அன்னார், சட்டதிட்டங்களிலும் பார்க்க மனித உள்ளத்தின் மாண்பினையே பெரிதும் மதித்தவர். சிறந்த ஒழுக்கத்தையும் மாணவப் பருவத்துக்குரிய கட்டுப்பாடுகளையும் வற்புறுத்திய அதேவேளையில், சுதந்திரமான சிந்தனையையும் துணிவையும் உற்சாகப்படுத்தினார். ஒரு காலத்தில் இந்துக்கல்லூரியில் முற்போக்குச் சிந்தனைகளை விதைத்துவந்த குறிப்பிடத்தக்க ஆசிரியர் திலகங்களில் சரவணமுத்துவும் ஒருவர். போற்றத்தக்க போதனாசிரியராக விளங்கியது மட்டுமன்றி, வகுப்பறைக்கு வெளியே மாணாக்கரது நலனில் அக்கறை கொண்டவராகவும் இருந்தார் இங்கிதமும் இனிமையான சுபாவமும் வாய்க்கப்பெற்றிருந்த அன்னார் கல்லூரிக்கே பெருமை பெற்றுத் தந்தார் எனலாம்.

1937-ம் வருடத்திலிருந்து 1970-ம் வருடம் இளைப்பாறும்வரை இந்துக்கல்லூரியிலேயே பணிபுரிந்தமையால் கல்லூரியின் வளர்ச்சியுடனும் வரலாற்றுடனும் அவருக்கு நெருங்கிய பிணைப்பு இருந்து வந்தது. அதனால் கல்லூரியை நினைக்கும்போதெல்லாம் சரவணமுத்து அவர்களையும் நினைத்துக்கொள்வது பலருக்கு சகஜமாகியிருந்தது.

சிறந்த ஆசிரியர்களைத் தந்தது யாழ்ப்பாணம். அவருள்ளும் மிகச் சிறந்தவர்களில் ஒருவராக மிளிர்ந்தவர் அமரர் சரவணமுத்து. ஆழ்ந்த மதிப்புடனும் வணக்கத்துடனும் இந்த அஞ்சலியைச் செலுத்துகின்றேன், பலரும் பின்பற்றத்தக்க இலட்சிய வாழ்வு அவரது வாழ்வு. அதனை நினைவு கூருவோமாக.

பேராசிரியர் க. கைலாசபதி
(கலைப்பீடத் தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# "விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் ஈடுபடுவதன் மூலம் மனஉறுதியைப் பெறலாம்"

[அரியாலை]

விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதன் மூலம் அவர்களுக்கு உடலுறுதி, மனவுறுதி, பொறுமை சருதாத மனநிலை கட்டுப்பாடு, என்பன உண்டாகின்றன. சிரமமான பயிற்சியின் மூலமே போட்டிகளில் வெற்றி பெறமுடியும் இளமையிலே சுரமமான பயிற்சியை மேற்கொள்ளும் ஒருவன் முதுமையிலும் சிறந்த வீரராக விளங்குவான்.

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரி ஆரம்பபாடசாலையின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வைத்தியகலாநிதி ஆர். கணேசமூர்த்தி பேசுகையில் கூறினார்.

உதவி அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஆரம்பபாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. வி, துரைச்சாமியின் வரவேற்புரையைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி ஆர் கணேசமூர்த்தி பேசுகையில் 'ஆதிகாலத்தில் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதன் விலங்குகளிடமிருந்து தப்பிச் செல்ல முதலில் ஓட ஆரம்பித்தான். காலஞ்செல்ல தமக்குள்ளே போட்டிகளை ஏற்படுத்தி ஓடத்தொடங்கினன் கிறிஸ்துவுக்கு முன் 7ம் நூற்றாண்டில் விளையாட்டுக்களில் போட்டிகள் தொடங்கின. 1912ம் ஆண்டிலே தான் முறையாக விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. இப்பொழுது இருக்கும் போட்டிகளிலும் சிறிது வேறுபாடாக அவை அமைந்திருந்தன. வெற்றி பெற்றவர்கள் வெற்றியில் பெருமிதம் கொள்ளாமலும் போட்டிகளில் தோல்வியைத் தழுவிக்கொண்டவர்கள் மனச்சோர்வு அடையாமலும் தொடர்ந்தும் முயற்சிகளைமேற்கொண்டுவெற்றியை அடைய வேண்டும்'' என்று கூறினார்,

போட்டி ஆரம்பத்தில் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் ஏற்றுக்கொண்ட வைத்திய கலாநிதி பாடசாலைக் கொடியை ஏற்றிவைத்துப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை யாழ். பல்கலைக்கழக வைத்தியபீட சிரேஷ்டபோதனாசிரியர் வைத்திய கலாநிதி திருமதி ஜெயதேவி கேணசமூர்த்தி வழங்கினார்.

## நவநாள் உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை தெற்கு அர்ச் சந்தியோகுமையோர் ஆலய வருடாந்த நவநாள் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிப்பூசையும், திருச்சுரூப பவனியும் நடைபெறும். பூசைகளை சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு எச், ஜெபநேசன் அடிகளார் நிறைவேற்றுவார்.

# "கிராமங்கள் புனரமைப்பில் காந்தீய இயக்கம்"

(கிளிநொச்சி)

''கிராமங்களை புனரமைக்கும் பாரிய பணியில் காந்தீய இயக்கம் ஈடுபட்டுள்ளது. கிராமிய மக்களின் நல்வாழ்வே எமது இலட்சியம்''

இவ்வாறு காந்தீய இயக்க கிளிநொச்சி பிரதேச அமைப்புச் செயலாளர் திரு ப. வை. ஜெயபாலன் உருத்திரபுரம் சிவநகரில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போது கூறினார்.

சமூக சேவையாளர் திரு. கே. ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு ஜெயபாலன் மேலும் பேசுகையில்: ''திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற பகுதிகளில் உள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபட்ட காந்திய இயக்கம் இப்பணியில் மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளது. இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி பிரதேச அபிவிருத்தி திட்டத்தின் மூலம் படித்துவிட்டு வேலைவாய்ப்பற்றிருந்த இளைஞர்களும் யுவதிகளும் வேலை வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர்'' என்றார்.

தலைவர் திரு ஏகாம்பரம் தமது உரையில்: ''பின்தங்கிய பகுதி அபிவிருத்தியில் காந்தீய இயக்கம் கவனம் செலுத்தி வருவது வரவேற்கத் தக்கதாகும் என்றார்

கிளிநொச்சி குருகுல அதிபரும், காந்திய இயக்க தலைமைப்பீட உபதலைவருமாகிய திரு வே. கதிரவேலு பேசுகையில்;

''குழந்தைகள் தெய்வத்திற்கு சமமானவர்கள். பாரதி குழந்தை இலக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார் குழந்தைகள் உள்ளத்தில் சிறந்த சிந்தனைகள் உருவாக பாரதி பாடுபட்டார். பாரதியின் கனவுகளில் ஒன்றாகிய குழந்தைகள் நலம் பேணலில் காந்திய இயக்கம் ஈடுபட்டுள்ளது'' என்றார்.

திரு ஏ ஜி. இராமநாதன், கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் திரு எஸ். டேராசிங்கம், கவிஞர் நவ. பாலகோபால் திரு கே. ராமஜெயம், காந்தீய கிளிநொச்சி பிரதேச தலைவர் திரு நா. சோதிநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

# வீடியோமூலம் திரைப்படம் காட்டுவதைத் தடைசெய்க

## • ஜனதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வீடியோ தொலைக்காட்சி மூலம் தனியார், திரைப்படங்களைக் காட்டிப்பணம் வசூலிப்பதைத் தடைசெய்வதற்குச் சட்டம் கொண்டுவருமாறு ஜனதிபதியைக் கோருவது, இறக்குமதிசெய்யப்படும் சுங்கப்பகுதியிலிருந்து எடுக்கப்படாதிருக்கும் பத்துத் தமிழ்ப்படப் பிரதிகளைப் பாரமெடுத்து முறைப்படி வழங்க நடவடிக்கை எடுக்மாறு திரைப்படக் கூட்டுத்தாபனத்தைக் கோருவது. தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு முன்னைய அரசு காலத்தில் வழங்கப்பட்டமைபோன்று சலுகைகள் வழங்கவேண்டும். தரமான தமிழ்ப்படங்களை அரசு தமிழகத்திலிருந்து இறக்குமதிசெய்யவழிவகுக்கஅரசை கோருவதுடன் திரைப்படங்களைத் தெரிவுசெய்ய அனுப்பப்படும் தூதுக்குழுவில் எமது சங்கத்தின் பிரதிநிதி ஒருவருக்கும் இடமளிக்குமாறு கோருவது.

மேற்கண்ட தீர்மானங்கள் நேற்றுக் காலை யாழ். றீகல் படமாளிகையில் நடைபெற்ற 'யூனைட்டெட் எக்ஸ்ஸிபிற்றேஸ்' சங்கத்தால் நிறைவேற்வேற்றப்பட்டது. சங்கத் தலை திரு. ரொபின் தப்பு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். குடாநாட்டிலுள்ள பல திரையரங்குகளின் உரிமையாளர்கள் கலந்துகொண்டனர் (கி

## ஐந்து...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பதி முழுவதுமே முருகபக்தி முருகனடியார்பக்தி தண்ணீர் பந்தல் முதலிய சாதனங்களால் தொண்டுசெய்தல் என்பனவற்றையும் கண்டு கண்ணைப்புனிதப்படுத்தலாம் செங்கையில் ஒளிர்வேலையுடைய ஆறுமுகப் பெருமான் விநாயகர் முத்துக்குமரசுவாமி சந்திரசேகரர் சண்டேஸ்வர் என்பவர்கள் தனித்தனி தேரில்வரும் காட்சியும் அடியார்கள் அங்கப்பிரதட்சணம் செய்தல் வலம்வருல் அரோகரா ஒலியுடன் தேர்வடம் பிடித்தல் முதலியவழிபாடுகளும் தெய்வீகப்பொலிவுடன் நிகழும்.

இத்தகையசிறப்புடைய தீர்த்திருவிழாவில் மாணவக் கந்தன் முன்நின்று ஆறிருதடந்தோள் வாழ்க..., வாழ்கசீரடியாரெல்லாம் என்று வணங்கினர் காண்பன கேட்பன சொல்லுவன ஆதியனஎல்லாம் இனியனவாக அமையும் என்பன உறுதி.

# "ஆலயத்தை ஆளநினைப்பது மடமையாகும்"

(யாழ்ப்பாணம்)

''ஒரு மனிதனது உயிர் கூட அவனுக்குச் சொந்தமாக இல்லை; அவன் தற்கொலை செய்ய முயன்று தப்பிவிட்டானால், அரசாங்கம் அவன் மீது நடவடிக்கை எடுக்கிறது. இப்படி இருக்க வழிபடும் ஆலயத்தைத் தனக்குச் சொந்தம் என்று ஆளநினைப்பது மடைமையிலும் மடைமை.''

இவ்வாறு சுன்னகம்பொலிஸ் நிலையப் பொறுப்பதிசாரி திரு. பொன். சுகுணேந்திரன், இணுவில் கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இணுவில் சமாதான சபைத் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. சுகுணேந்திரன் தொடர்ந்து பேசுகையில்:- ''இணுவில் கந்தசுவாமி கோவிலிலுள்ள மஞ்சத்தைப் போன்று, இந்து கலாசாரம் உள்ள இந்தியாவில்கூட காணவில்லை. அந்தளவுக்கு மனிதனால் உண்டாக்கிய மஞ்சம் என்று சொல்ல முடியாதவகையில் சிற்ப வேலைகள் அமைந்னள்ளன'' என்று கூறினர்.

சமாதான சபைத் தலைவர் திரு சண்முகலிங்கம், திரு சுகுணேந்திரனின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

வலி தெற்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவர் திரு செ. இலகுநாதன், கிராமசேவை அலுவலர் திரு எஸ். சச்சிதானந்தன், திரு. சி. ஆறுமுகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (மா)

## மதுபழக்கத்தினல் ....

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

மிகவும் அவசியமான இந்த மது ஒழிப்புப் பற்றிய கருத்தரங்குகள் சகல பகுதிகளிலும் நடாத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அலங்கார ஊர்திகள் பவனியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. இ. விஜயரத்தினம் வழங்கினர். ஆசிரியர் திரு. உ. ந தேவகடாட்சம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

# பருத்தித்துறை-ஆழியவளை பஸ் சேவை சீர்கேடு!

## • எம். பி. யிடம் புகார்

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் நடத்தப்பட்ட மினிக் கச்சேரிகளின் போது பருத்தித்துறை-ஆழியவளை இ. போ ச. பஸ் சேவைச் சீர்கேடு பற்றி மக்கள் புகார் செய்த போது மினிக் கச்சேரியில் கலந்து கொண்ட வடபிராந்திய இ. போ. ச. செயலாற்றுமுகாமையாளர் திரு, மயில்வாகனம் பருத்தித்துறை – ஆழியவளை இ. போ. ச. பஸ் சேவையைச் சீர்செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கபடுமென்று கூறியிருந்தும் ஏற்கனவே நடைபெற்ற சீர்கேடுகள் மீண்டும் நடைபெறுவதாகவும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும், இப்பகுதி மக்கள் பருத்தித்துறை எம். பி திரு கே. துரைரத்தினத்திடம் கோரியுள்ளனர்.

இப்பகுதியில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா தலைமையில் சகல திணைக்கள உயரதிகாரிகளும் உள்ளடங்கிய மினிக் கச்சேரிகள் நடைபெற்றன

இம் மினிக் கச்சேரியின் போது இப்பகுதி மக்கள் பருத்தித்துறையிலிருந்து ஆழியவளைக்கு வரும் பஸ் வண்டிதானையடியுடனேயே திரும்பி விடுவதாகவும், அத்துடன் இந்த பஸ் சேவை ஒழுங்காக நாடாத்தப்படுவதில்லையென்றும் புகார் செய்திருந்தனர்.

இந்த பஸ் சேவையை உடனடியாகச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்திருந்தார். ஆனல் தொடர்ந்தும் இந்தபஸ்சேவையில் ஒழுங்கீனமே காணப்படுவதால் இப்பகுதி மக்கள் மிகக் கஷ்டமனுபவித்து வருவதாகவும், இதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் பருத்தித்துறை எம். பியிடம் கோரியுள்ளனர்.

திரு. துரைரத்தினம் எம். பி. வடபிராந்திய போக்குவரத்துச் சபையுடன் தொடர்பு கொண்டு இந்த பஸ் சேவையைச் சீர்செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார்.

## இராஜினமா

(பண்டத்தரிப்பு)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. எஸ். பாலசண்முகநாதன் தமது பதவியிலிருந்து இராஜினமாச் செய்துள்ளார்.

நாட்டிய சாஸ்திரத்தின்

# நூற்றெட்டுக்கரணங்களும் காண்பிக்க வல்லவர் சுவர்ணமுகி

சென்னை சாந்தோம் ஹைறோட்டில் உள்ள அந்த இல்லத்திலிருந்து திரும்புகையில் இரண்டுமணி நேரத்துக்கு மேலாகியிருந்தது.

நேரம் போனதே தெரியவில்லை. வெகு அமைதியாகவும் அடக்கமாகவும், ஆனல் வெகு ஆவலுடனும் உறுதியுடனும் 'கரணங்கள்' பற்றிய என்னுடைய கேள்விகளுக்கு பதிலும் விளக்கமும் அளித்துக் கொண்டிருந்தார் சுவர்ணமுகி.

அவர் தன்னுடைய வாதத்துக்கு ஆதாரமாக, ஒவ்வொன்ருக ஒன்று எடுத்துவந்த நூல்கள் நமக்கு முன்னல் குவிந்து கிடந்தன!

''நான் என்னுடைய நடனத்தில் காண்பிக்கின்ற 'கரணங்கள்' அத்தனையும் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டவை. அவை ஆண், பெண் இருபாலாருக்குமே பொதுவானவை. ஆனல், அவற்றை எப்படி— எந்த உருப்படியில்— எந்தவகையில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு, அந்தவகையில் செய்யவேண்டும். 'சின்னஞ்சிறு கிளியே...' பாடலுக்குப்போய் 'கரணங்களை'ச் செய்தால் அது அர்த்தமற்றது...' என்று இப்படி 'அடுக்கிக் கொண்டு' போன சுவர்ணமுகி; 'தாண்டவம் சிவனும் பார்வதியும் இணையாக ஆடியது-தான். ஆனல், அந்தப்பெரிய சடையில் கணவனைத் தோற்கடிக்கக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காகத் தான், சிவன் 'விருச்சிக கரணமாக' [56-வதுகரணம்] தனது காலால் தனது குண்டலத்தைத்தொட்ட போதுபார்வதி, தான் தோற்றுவிட்டதுபோல் காட்டுதற்காகவே அதனைச் செய்யவில்லை. அது தவிர, பார்வதி அந்தக் கரணத்தை' ஆட முடியாமலோ அல்லது ஆடக்கூடாது என்பதாலோ ஆடாதுவிடவில்லை' என்று வாதிட்டார்'

'மாலி'

நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 108'கரணங்களையும்' காண்பிக்க வல்லவர் சுவர்ணமுகி. இதற்காகத் தான் தமிழ்நாடு அரசு 'அரச நர்த்தகி'யாக அவரை 'தத்து' எடுத்திருக்கிறது.

குறிப்பாக 'நடனம் ஆடினர்...' பதத்தில் இவர் பலசிக்கலான சரணங்களைக் காண்பிக்கிறர். மற்றும், 'நாதர்முடி மேலிருக்கும் நல்ல பாம்பே... சித்தர் பாடலுக்கு ஆடுகையிலும் 'சகடாசியா' (107-வது) 'கங்கவதரண' (108-வது) போன்ற 'சரணங்களை'யும் காண்பிக்கிறர்.

இந்த 'கரணங்கள் இப்போது நமது நாட்டிய உலகில் வெகுவான கவனத்தை ஈர்ப்பன.

'சரணங்கள்' நாட்டிய நிலைகள்' அல்ல; அவை 'அசைவுகளே' என்ற நிலையை டாக்டர் பத்மா சுப்ரமண்யம் தெளிபடுத்திக் கூறியவேளை தான் 'கரணங்களில்' இந்த 'விழிப்பு' ஏற்பட்டது.

சுவர்ணமுகியின் தந்தை காலஞ்சென்ற, திரு. பூபால், இந்த 'கரணங்களிலே'தேர்ச்சி பெற்ற நடனக் கலைஞர், தாயும்கூட ஆடற்கலைஞர் தான்.

மதுரையைச் சார்ந்த இக் கலைத் தம்பதியர் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அந் நாட்களில் நன்கு அறியப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்து ஆலயங்கள் பலவற்றிலே இவர்கள் நடனம் ஆடியிருக்கிறர்கள்; சிறிது காலம் யாழ்ப்பாணத்தில் தங்கியுமிருந்திருக்கிறர்கள்.

தன்னுடைய பொக்கிஷங்களைத்தையும் சுவர்ணமுகியிடம்தான் ஒப்படைத்துச் சென்றிருக்கிறர். அவரது தந்தை பூபால் ஐந்து வயதில தனது புதல்விக்கு இந்த 'கரண' பயிற்சியை ஆரம்பித்திருக்கிறர் அவர். திரிசரண சுத்தியோடு பயின்றிருக்கிறர் சுவர்ணமுகி.

சுவர்ணமுகி இப்போது எதிர்நோக்கும் விமர்சனம். அவர் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் 'சரணங்களை'த் தான் ஆடுகிறர் என்றலும் —இந்தக் 'கரணங்கள்' ''சரணம் தப்பினல் மரணம்'' என்னும் படியான கடினமானவைதாம் என்றலும் அவரது ஆடல்ஒரு 'சர்க்கஸ்' மாதிரி 'அக்ரோபட்டிக்'காக (Acrobatic) இருக்கிறதா என்பதேதான்.

''உடலும் ஆத்மாவும் இணைந்த நடன வெளிப்பாடே கரணம்'' எனப்படுகிறது.

''உண்மையான நிருத்தம் என்பது உடல், உணர்ச்சி, அறிவு, ஆத்மா ஆகிய நிலைகளிலே அழகையும் மகிழ்வையும்வெளிப்படுத்துவது'' என்று சொல்லப்படுகிறது.

இக் கூற்றுக்களினடிப்படையிற்றன் சுவர்ணமுகி எதிர்நோக்கும் விமர்சனத்துக்கு விடைகாண முடியும்.



மண்குப்பான் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் இடம்பெற்ற பாராட்டுப் பெற்ற நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றத்தினரின் ''இலங்கை வேந்தன்'' நாடகத்தில் ஒரு காட்சி இது.

# “தமிழீழப்போராட்டத்துக்கும் மா. அபி. சபைக்கும் சம்பந்தமில்லை”

## மானிப்பாய் எம். பி. கூறுகிறர்

[யாழ்ப்பாணம்]

பாவட்ட அபிவிருத்திசபைக்கும் தமிழீழப்போராட்டத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. அபிவிருத்தி சபை எமது பகுதியின் அபிவிருத்தியோடுசம்பந்தப்பட்டது. எங்கள் பகுதி அபிவிருத்தி எங்கள் கையிலேயே இருக்கவேண்டுமென்பதற்காகதத்தான் அன்று தொட்டு செயல்பட்டுவருகின்றேம்'' என்று மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், வரவேற்பு சேவைநலம் பாராட்டு விழா ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

வலிதெற்கு உதவிஅரசாங்க அதிபர் -பிரிவு, பிரதேசசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. செ. இலகுநாதனுக்கும், இணுவில் கிராம சேவையாளராகவும், சமாதான சபைத்தலைவராகவும் கடமையாற்றிய திரு. சீ. தியாகராசாவின் சேவையைப் பாராட்டியும் வரவேற்பு சேவைநலம் பாராட்டுவிழா இணுவில் அ. மி. த. கலவன் பாடசாலை அரங்கில் நடைபெற்றது.

இணுவில் பொதுஸ்தாபனங்களின் ஆதரவில், இணுவில் சமாதான சபைத்தலைவர் திரு. தி. சி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தில் அரசியலதிகாரியாக இருந்த திரு அருளம்பலம் இப்பகுதி அபிவிருத்திசம்பந்தமாக கூட்டப்பட்ட சகலமகாநாடுகளிலும் கலந்து இப்பகுதிக்குப் பாடுபட்டோம் அப்பொழுது எம்மைக்குறைகூறுதவர்கள் இன்று ஓரளவு சட்டபூர்வமான அதிகாரத்தோடு அபிவிருத்தியிலீடுபடும் நேரத்தில் எம்மைப்பார்த்து குறைகூறுவது அவர்களின் அரசியல் அறியாத்தனமே.

நிர்வாகத்தைப் பரவலாக்க வேண்டுமென்ற காரணத்தால் காலத்துக்குக்காலம் ஆட்சியாளர் எடுத்தமுயற்சிகள் நிறைவேறவில்லை. ஆனல் இன்றைய அரசாங்கம் ஓரளவு நிர்வாகத்தையும் அபிவிருத்தியையும் பரவலாக்கவேண்டுமென்ற நோக்கத்தினல்தான் அபிவிருத்திசபையைக் கொண்டு வந்தது. இதை நாமும் வரவேற்கிறேம்.

### பேச்சுவார்த்தைகள்

''கடந்தகாலங்களில் அரசாங்கம் எதிர்க்கட்சிகளை கவனியாதுகண்மூடித்தனமாக நடந்த வேளையில், நாம் அவர்களின் கண்களைத் திறக்க சத்தியாக்கிரகம், உண்ணவிரதம் போன்றபோராட்டங்களை நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படிச்செய்தபடியால் பேச்சுவார்தைக்கு அழைத்தார்கள். இன்று எம்மைப்பேச்சுவார்த்தைக்கு அழைத்தபடியால், அப்படியான போராட்டங்கள் நடத்த வேண்டியேற்படவில்லை. இன்று பேச்சுவார்த்தையினல் பலவற்றை பெற்றிருக்கிறேம்.

இப்பொழுது வழங்கப்படும் நஷ்டஈடு மாவட்ட அபிவிருத்திசபை அதிகாரங்கள். நிர்வாகம் பரவலாக்கல் போன்றன எமது பேச்சுவார்த்தையின் பலனே.

அமரர் ஜி ஜி. பொன்னம்பலம் அன்று நடந்தவழியில் தான் சொல்கிறேம். என்று சிலர் சொல்கிறர்கள். அமரர் ஜி. ஜி. ஐக்கிய தேசியக்கட்சியில் ஐக்கியப்பட்டு பிரஜாவுரிமை பிரச்னைபோன்ற கொள்கைளை ஏற்றுத்தான் எமது பகுதிக்கு சில அபிவிருத்திகளைச் செய்தார். ஆனல் நாங்கள் எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாத கொள்கைகளை வன்மையாக எதிர்த்தும், எமது பகுதி அபிவிருத்திகருதி அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தும்வருகிறேம் எமது கொள்கையினின்றுதவருது. செயலாற்றி வருகின்றேம்.

### சமாதான சபைக்கு பாராட்டு

சுன்னகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. பொன் சுகுணேந்திரன் பேசுகையில் கூறியதாவது:

பொதுமக்களும் பொலிசாரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயலாற்றவேண்டும் இந்தவகையில் இப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுச்சங்கம் சமாதானசபை ஆகியனஅரும்பணி ஆற்றுகின்றன குறிப்பாக இணுவில் சமாதானசபை இப்பகுதியிலுள்ள 600 க்கு மேற்பட்டபிரச்னைகளை சமாதானமாகத்தீர்த்ததன் மூலம் பொலிஸ் பகுதியினரின் நன்மதிப்பையும், இப்பகுதிமக்களின் ஆதரவையும் சமாதான சபை பெற்றுள்ளது.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர்திருபி எல். பற்றிக், சுன்னகம் ப. நோ. கூ. ச. தலைவர் திரு. ச. முத்துலிங்கம், உபதலைவர் திரு. சி குமாரவேல் மற்றும் கிராமோதயசபைத் தலைவர் உட்படடலர் உரையாற்றினர்.

திரு. செ. இலகுநாதனும், திரு. சீ. தியாகராசாவும் தமக்களிக்கப்பட்டவரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசினர்.

[மா]

# ஒற்றைக்காலில் நிற்பதில் புதிய உலகசாதனை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடியைச் சேர்ந்த செல்வன் க. விமலேஸ்வரன், ஒற்றைக்காலில் நின்று உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவர் 50 மணித்தியாலங்கள் 10 நிமிடம் ஒற்றைக்காலில் நின்று மற்றைய உலக சாதனை வீரர்களை முறியடித்து வெற்றிவாகை சூடியுள்ளார். இவரது சாதனை விபரம் உலக சாதனை வெளியிட்டுவரும் 'கினஸ்' என்ற சர்வவேச சாதனை நூலில் இடம் பெறுமென்று நம்பப்படுகிறது.

இதற்கு முன் யாழ் கஸ்தூரியார் வீதியைச்சேர்ந்தவரும் வைத்தீஸ்வரக் கல்லூரியின் மாணவருமான செல்வன் ஸ்ரீஸ்கந்தராசா 31மணித்தியாலங்களும் 45 நிமிடங்களும் ஒற்றைக்காலில் நின்று முன்னைய உலகசாதனையான 18 மணித்தியாலமும் 5 நிமிடமும் சாதனையை முறியடித்து 'கினஸ்' உலகசாதனை நூலில் இடம் பெற்றர் என்பது குறிப்பிடத்தக்கது

ஸ்ரீதரின் விளையாட்டுக்கழக உறுப்பினரான செல்வன் விமலேஸ்வரன் அரசடி ஞானசக்தி சனசமூகநிலைய மைதானத்தில் சாதனை முயற்சியை நடாத்தினர். யாழ். மாநக

(2-ம பக்கம் பார்க்க)

T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், TV ஏரியல்
கோளாறுகள் சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரமும் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பினன்ஸ் வசதியுடன் பெறலாம்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

# 'பதற்றமான சூழ்நிலையில் பண்டாரவன்னியனுக்குவிழா'

## யாழ். எம். பி. யோகேஸ் கருத்து

(அரியாலை)

''இந் நாட்டில் ஆட்சிசெய்த அரசாங்கங்கள் வன்னிப்பகுதியில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் வன்னிப் பிரதேசத்தை ஆண்ட பண்டாரவன்னியனுக்கு இன்று பதற்றமான சூழ்நிலையில் விழா எடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. வன்னியில் சுதந்திரமாக வாழ்ந்த நாம் எமது மண்ணைப் பறிகொடுத்து சிறுபான்மையினமாக வாழுகின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது''

இவ்வாறு அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 10வது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு, எம். தாமோதரம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''வன்னி நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமை யாழ்ப்பாணத்திலும் ஏற்படலாம். எமக்குள் இருக்கும் சால பேதங்களையும் மறந்து எமது மண்ணைக் காப்பாற்ற ஒன்றுபட வேண்டும் நாம் எல்லோரும் ஒற்றுமையாக ஒரு தலைமையின் கீழ்ஒன்றுதிரண்டு விடுதலைக்காகப் போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

''எமது பாரம்பரிய தலைநகராக விளங்கிய திருகோணமலையும் நாளுக்கு நாள் பறிபோய்க் கொண்டிருக்கிறது. நேர்மையாக, அச்சமில்லாமல் உறுதியுடன் எமது சுதந்திரத்தைப் பெறப் போராட வேண்டும்.

''1977ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எமதுஇயக்கம் எமது மண்ணை மீட்டெடுக்கும்இலட்சியத்துடன் போட்டியிட்டது. எமது இலட்சியத்தை ஏற்றுக்கொண்ட தமிழ் மக்கள் ஏகமனதாக வாக்களித்தார்கள். இதன் மூலம் எம்மீது பாரிய பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதனை உணர்ந்தே நாம் செயல்பட்டு வருகிறோம்

''நூற்றுக்கணக்கான வாலிபர்கள் இன்று எமது இலட்சியத்தை வென்றெடுக்க தலைமறைவாக வாழுகின்றநிலைமை ஏற்பட்டுள்ளது. எத்தனையோ தாய்மார்கள் தமது புத்திரர்களை போராட்டத்தில் இழந்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் தமது சுதந்திரத்தையும் இறைமையையும் காப்பாற்ற தாயகம் அவசியமாகிறது. துன்பங்களையும் அனுபவித்தே உலகில் பல தேசிய இனங்கள் விடுதலை பெற்றுத் தமக்கென ஒரு நாட்டைப் பெற்றுள்ளன. இதனைப்போலவே நமக்குள்ளே இருக்கும் சகல பேதங்களையும் அறவே ஒழித்து, ஒன்றுபட்டு இன விடுதலைக்காக, எமக்கென ஒரு நாட்டை அமைத்துக்கொள்ள வேண்டும்.'

### முதல்வர் பேச்சு

யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது:–

தமிழ் மக்கள் இன்று மிகவும் இருளான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் நமது சொத்துக்களையும், உடைமைகளையும் நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தை நம்பிக்கொண்டிராமல் எமது சுய முயற்சியின் மூலம் முன்னேற வேண்டும். எமது கலை கலாச்சாரங்களைப் பேணிப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எம்முடையதாகும். மாநகர சபை நிர்வாகத்தைத் திறப்பட நடாத்த இதுபோன்ற சனசமூக நிலையங்கள் ஒத்துழைப்புத்தரவேண்டும். சட்டத்துக்கு விரோதமாக கள்ளத்தனமாகப் பலர் மின்சாரம் பாவிக்கிறார்கள். இதனைத் தடைசெய்ய சனசமூகநிலையங்கள் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்.'

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் உப தலைவர் திரு. எஸ். நாகராசா பேசுகையில் கூறியதாவது:–

'இச்சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு நல்லூர் எம். பி திரு எம். சிவசிதம்பரம் பத்தாயிரம் ரூபா ஒதுக்கீடுசெய்து தந்துள்ளார். அடுத்த ஆண்டிலும் உதவிசெய்ய முடிவுசெய்துள்ளார். தமிழ் மக்கள் தமிழ் மண்ணைக் காப்பாற்ற, குடியேற்றத்துக்குத் தகுதியாக இருக்கும் கிளிநொச்சி, பூநகரி வவனியா போன்ற பகுதிகளில் போய்க் குடியேத் தயாராக இருக்கவேண்டும்,

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை திருமதி யோகேஸ்வரன் வழங்கினர். கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. (மா)


ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
அண்ணாவின் ஆசை

2-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
20 7-82வரை சிவாஜி நடித்த
மோகனப் புன்னகை (கலர்)
அடுத்தவெளியீடு 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

ராணி (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
SILVER DREAM RACER

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

Windsor (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 4-30, 7-00, 9-30
Sat. Sundays 2-00 p. m.
Escape of the Birdmen

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
பரபரப்பூட்டும் 9-வது கடைசி வாரம்!
கடல் மீன்கள் —கலர்—

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100வது வெற்றித் திருநாளைநோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

RAJAH Jaffna FROM 19—20-
Daily 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
Alan Alda Michel Caine—Elaine May in
California Suite (Color)


''சில அரச ஊழியரிடையே

# மதுப்பழக்கத்தினால் கடமை பாதிக்கப்படுகிறது''

## -யாழ். அரச அதிபர்

(பண்டத்தரிப்பு)

''எமது இளம் சந்ததியினர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகாது நல்வாழ்வு வாழ வழிவகுக்க வேண்டியது எமது கடமையாகும். பாடசாலை மட்டத்தில் மதுவினால் ஏற்படும் தீமைகளையும், அனர்த்தங்களையும் எடுத்து விளக்கும் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். அரசாங்க ஊழியர்களில் சிலர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகித் தங்கள் கடமைகளை நேர்மையான முறையில் நிறைவேற்ற முடியாமல் இருப்பதையும் பல சந்தர்ப்பங்களில் நான் அவதானித்துள்ளேன். இவர்கள் குடும்பங்களில் பொருளாதாரப் பாதிப்பும் குடும்பத் தகராறுகளும் ஏற்பட இந்த மதுப் பழக்கம் வழிசெய்கின்றது''

மேற்கண்டவாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியாரால் பண்டத்தரிப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட மது ஒழிப்புப்பற்றிய கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் மவட்ட அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா குறிப்பிட்டார். யாழ். நீதிமன்ற நீதவான் திரு. ரி ஜோகநாதன் தலைமையில் டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார் இல்லத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் யாழ் மாவட்டத்திலுள்ள லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும், பெருந்தொகையான பொதுமக்களும் கலந்துகொண்டனர். கருத்தரங்கின் ஆரம்பத்தில் மதுவின் தீமைகளை விளக்கும் அலங்கார ஊர்திகள் பவனியொன்றும் நடாத்தப்பட்டது.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து யாழ். நீதிமன்ற நீதிபதி திரு. ரி ஜோகநாதன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

### கடும்தண்டனை

''எமது நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு அளவுக்கு மிஞ்சிய மதுபோதையும் ஒரு முக்கிய காரணமாகும். நீதிமன்றங்களில் பல வழக்குகள் குடிபோதை சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின்பு 1979ம் ஆண்டில் மது போதை சம்பந்தமாகப் பல புதிய சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. முன்னரிலும் பார்க்க மது போதையினால் இழைக்கப்படும் குற்றச் செயல்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கக் கூடியமுறையில் சட்டங்களில் திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு மதுவிற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது. பொது இடங்களில் மதுபோதையில் நின்று தொல்லை கொடுப்பவர்களைப் பொலிசார் கைதுசெய்து சுவாசப் பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் பொலிசாருக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ளது. ஒருவர் தமது மோட்டார் வாகனத்தை மது அருந்திவிட்டுச் செலுத்தினால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். மினிபஸ் உட்படப் பொதுமக்கள் செல்லும் வாகனத்தை மது அருந்திவிட்டு செலுத்தினால் அது பாரதூரமான குற்றமாகக்கணிக்கப்பட்டு 2 ஆயிரம்ரூபா அபராதமும், மூன்று மாதக்கடூழியச் சிறைத்தண்டனையும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்க நீதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி ஒருவருக்கு மரணம் விளைவித்தால் 2வருட காலம் தொடக்கம் 10 வருடகாலம் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படும், அத்துடன் அவரது சாரதி லைசென்ஸ் பத்திரமும் ரத்துச் செய்யப்படும் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி ஒருவருக்குக் காயம் விளைவித்தால் 5 ஆயிரம் ரூபா அபராதம் அல்லது 5வருட சிறைத் தண்டனையும் அல்லதுஇரண்டும்சேர்த்து விதிக்கப்படும்.''

### உடலுறுப்புக்களைப் பாதிக்கிறது

யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் சுப்பிரமணியம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:–

''மது அருந்தும் பழக்கம் மனிதனின் உடல் நலத்தையும் உள வளர்ச்சியையும் பெரிதும் பாதிக்கின்றது. மதுவினால் உடல் உறுப்புகளின் வழமையான செயற்பாட்டு முறைகள் பெரிதும்பாதிக்கப்படுகின்றன. படித்ததினால் ஏற்படுகின்ற நுண்ணறிவை மதுபோதை பெரிதும் பாதிக்கின்றது கற்ற அறிவை மதுபோதை பின் தள்ளுகின்றது. இயற்கையான தொழிற்பாடுகளை மது பாதிப்படையச் செய்கின்றது. மது அருந்திவிட்டு ஒரு வாகனத்தைச் செலுத்துவதினால் ஆபத்து நேரங்களில் நுண்ணறிவு தடைப்பட்டு உடலின் சாதாரண தொழிற்பாடுகள் இயங்காத நிலை ஏற்படும். இதனாலேயே வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. ஆகவே மதுவைத் தவிர்ப்பதாலே நல்வாழ்வுவாழமுடியும் என்பதை அனைவரும் உணர வேண்டும்'' என்றார்.

### புற்றுநோய் குடற்புண் ஏற்படும்

அடுத்து டாக்டர் ஜே. பி. பிலிப் உரையாற்றுகையில் மதுவில் குறிப்பாக சாராயத்தில்–கசிப்பில் அடங்கியிருக்கும் நச்சுத்தன்மைகளையும் அதை அருந்துவதினால் ஏற்படும் உடல் பாதிப்புகளையும் விபரமாக எடுத்துக் கூறினர். புற்றுநோய் ஏற்படவும், குடற்புண்கள் ஏற்படவும் வழிவகுக்கும் இந்த மதுவகையைத் தவிர்ப்பதே உடல் நலத்திற்கு உகந்ததென்றும் வற்புறுத்திக் கூறினர்.

சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு. ஜெபநேசன் அடிகளார் உரையாற்றுகையில் இன்றைய சமுதாயத்திற்கு

(5 ம் பக்கம் பார்க்க

# வடபிராந்திய பொலிஸ் அதிபர்கள் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய திரு. அ நவரத்தினம் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதையொட்டி, வடபகுதி பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மற்றும் பொலிஸ் அதிகாரிகள் நேற்று பிரிவுபசாரம் அளித்துக் கௌரவித்தனர்.

ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் யாழ் உதவிப் பொலிஸ் அதிபர்கள் திரு. பேர்ணண்டோ, திரு. எட்வேட், திரு. எஸ். நவரத்தினராசா ஆகியோரும் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

இவர்களின் இடத்துக்கு உதவிப் பொலிஸ் அதிபர் பயிற்சியிலிருந்த 10 பேரில் மூவர் யாழ்ப்பாணம் வருகின்றனர். (மா)

## ஆறுமுகத்தான் குடியிருப்பு கொலைவழக்கு:

# எதிரிவிடுதலை; பொய்சாட்சியம் அளித்த பெண்ணுக்கு அபராதம்

## மற்றொரு சாட்சிக்கு 3 மாதச்சிறை

[மட்டக்களப்பு]

ஆறுமுகத்தான் குடியிருப்பு கொலை வழக்கில் பொய்ச் சாட்சியமளித்த குற்றத்திற்காக முதலாவது சாட்சிக்கு 500ரூபா அபராதமும், இரண்டாவது சாட்சிக்கு மூன்றுமாத சிறைத் தண்டனையும் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் விதிக்கப்பட்டது. எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் கடந்த 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ந் திகதி ஆறுமுகத்தான் குடியிருப்பு என்னும் இடத்தைச் சேர்ந்த இராசையா யோகநாதன் என்பவர் தமது மைத்துனராகிய சி கணபதிப்பிள்ளை என்பவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கி கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது

இவ் வழக்கு மட்டக்களப்பு மேல் நிதிமன்றத்தில் மேல்நிதிமன்ற நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காலஞ்சென்றவரின் மனைவி திருமதி க. ஜெகதீஸ்வரி, எதிரியான சகோதரனை காப்பாற்றுவதற்காக முந்திய விசாரணைகளின்போது பொய்ச் சாட்சியமளித்ததையும், அவரது உறவினரான இரண்டாவது சாட்சி க. அருணாசலம் உறவினரைக் காப்பாற்றுவதற்கு அதேபோன்ற பொய் கூறியதாகவும் யூரி சபையினர் ஏகமனதாக முடிவு செய்தனர்.

மேற்படி வழக்கின் முதலாவது இரண்டாவது முக்கிய சாட்சிகள் நீதிமன்றத்தில் பொய்கூறியதற்காக குற்றவியல் தண்டனை நடைமுறைக் கோவையின் 449 வது பிரிவின் கீழ் சாட்சிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. சாட்சி முரண்பாடு காரணமாக எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

காலஞ் சென்றவரின் மனைவியான திருமதி க. ஜெகதிஸ்வரி 30 வயது) எதிரியான தனது சகோதரன் திரு. இ. யோகநாதன் [41 வயது) என்பவரை காப்பாற்றுவதிற்காக திட்டமிட்டு பொய்சாட்சி கூறியமைக்காக 500 ரூபா அபராதமும் இரண்டாவது சாட்சியான திரு க. அருணசலம் [42 வயது' பொய் சாட்சி கூறியமைக்காக 3 மாத சிறைத்தண்டனையும் நீதிபதியால் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் அரசு தரப்பில் சட்டத்தரணி க. ஞானதாசனும் எதிரி தரப்பில் சட்டத்தரணி எம். சாலித்தும் ஆஜராகியிருந்தனர். [க]

## எழுதுமட்டுவாள் கொள்ளை வழக்கு

# எதிரி 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதி

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாள் கொள்ளை வழக்கில் எதிரி 5000ரூபாபிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில்நடைபெற்றது.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த செல்லத்துரை பாலசுப்பிரமணியம் என்பவர் இயக்கச்சி முகாவிலைச்சேர்ந்த தம்பிப்பிள்ளை கார்த்திகேசு என்பவரது வீட்டில் 82 மே 1ல் இரவு 8200 ரூபா பெறும்தியான தங்க நகைகளைக்களவாடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது,

இவ் வழக்கு மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபொழுது எதிரியை 5000 ரூபா உறுதி பிணையில் செல்ல அனுமதித்தார். (க)

## அடைவுநகையை

# கணவன் மீட்காததால் மனைவி தற்கொலை

[மன்னார்)

அடைவுவைத்த நகையை கணவன் மீட்டுத் தராததால் விரக்தியடைந்த மனைவி கிருமி நாசினி அருந்தித்தற்கொலை செய்து கொண்டார்.

மன்னார் வயல் வீதியைச் சேர்ந்த திருமதி மகேந்திர ராஜா [வயது 30] என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவர். இவரது மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டதாவது:

',மரணமானவர் திருமணமாகி 15 வருடங்கள். கடந்த 5 வருடங்களாக கணவருடன் அடிக்கடி குடும்பத்தகராறு ஏற்பட்டது.

அடைவு வைத்தநகை மீட்கப்படாததால் கணவன் மனைவியிடையே தகராறு ஏற்பட்டது.

இதனால் விரக்தியடைந்த மனைவி கிருமி நாசினியை அருந்தினார். கிருமி நாசினி அருப்தியவர் அயலவர்களினால் மன்னார் அரசினர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இவரது மரணம் தற்கொலை என மரணவிசாரணை அதிகாதி எம். எம். ஆலம் திர்ப்பளித்தார்.

## இன்று குருபூஜை

[சுழிபுரம்)

சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் குருபூஜை இன்று திங்கட்கிழமை காலை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும.

கல்லூரி இந்துமாமன்றத்தினால் கொண்டாடப்படும் இவ் விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார். இதனைத்தொடர்ந்து சைவப் பெரியார் தாற்றாண்டு விழாச் சபையின் மூன்றாவது வருடாந்தக் கூட்டம் நடைபெறும்


## ஹோம் பினான்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான
ORION-12" (T. V. BLACK and WHITE)
விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்
எம்மிடம் உள்ள அவசர தேவையான
மற்றைய பொருட்கள்
HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN,
PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமை காரியாலயம்:
ஹோம் பினான்ஸ் லிமிட்
இல. 463, காலி வீதி,
கொழும்பு—3
தொலைபேசி;58910

கிளை காரியாலயம்:
ஹோம் பினான்ஸ் லிமிட்
இல. 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8310


## உத்தரப்பிரதேச முதல் அமைச்சர்

புதுடில்லி ஜூலை.18

உத்தரப்பிரதேசத்தின் புதிய முதலமைச்சராக திரு. சீப்பத் மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் திரு, விஸ்வநாத் பிரதாப்சிங் ராஜினாமாச் செய்ததையடுத்தே இவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ...ான் மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லோஸ் இந்தவானில் பேசாலைக்குவந்துகொண்டிருந்ததாகவும்கூறப்படுசிறது. ஸ்ரானிஸ் லோஸ் நேற்று குறுக்கு விசாரணை செய்யப்படவிருந்ததாகவும் மேலும் கூறப்படுகிறது.

மன்னார் பொலிசார் இச்சம்பவம் பற்றி விசாரணை செய்து வருகின்றனர்.

## இப்படியும் நடக்கிறது

அகில இலங்கை ரீதியாக ஒரு கட்டத்தில் 'ஓகோ' என்று நடைபெற்ற மரம் நாட்டு விழா யாழ். நகரிலும் சிறப்பாக நடந்தது.

இதன் நினைவாக, யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக, வீதி ஓரமாக பத்து மரக்கன்றுகள் நாட்டப்பட்டு அதனைச் சுற்றி கற்களினாலான கூண்டுகளும் அமைக்கப்பட்டன.

இன்று இங்கு போய்ப்பார்த்தால் இரண்டு கூண்டுகள் தான் தலை நிமிர்ந்து நிற்கின்றன. ஏனையவை 'வன்செயல் நினைவுச் சின்னம்' மாதிரி சிதறுண்டு காணப்படுகிறது. இந்தக் கூண்டுக்குள் பூண்டும் இல்லை; செடியும் இல்லை.

'யாழ்ப்பாண செயலகம்' என்ற பெயர் மட்டும் பளிச் எனத் தெரிகிறது.

'ஊடுருவி'

## ஜேர்மன் தூதுவர் யாழ், விஜயம்

[யாழ்ப்பாணம்]

ஜேர்மன் ஜனநாயாகக் குடியரசின் இலங்கைத்தூதுவர் டாக்டர் டெயிற்றர் பிலிப்ஸ் இலங்கை ஜேர்மன் ஜனநாயக் குடியரசு நட்புறவுச் சங்க யாழ். கிளையின் அழைப்பை ஏற்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்

டாக்டர் டெயிற்றர் பிலிப்ஸ் எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதன் ஆகியோரைச்சந்தித்து உரையாடுவதுடன் யாழ். பொதுசனநூலகத்துக்கும் நூல்கள் அன்பளிப்புச் செய்யவுள்ளார்,

தூதுவரின் யாழ். விஜயத்தை யொட்டி இன்று மாலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் இலங்கை ஜெர்மன் நட்புறவுச்சங்க யாழ். கிளைத்தலைவரும வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. தா. திருநாவுக்கரசு உட்பட பலர் சொற்பொழிவாற்றுவர். [மா]

## விமானக் கடத்தல் சட்டமூலம்

[கொழும்பு]

விமானக் கடத்தல் தொடர்பான புதிய சட்டமூலம் எதிர் வரும் புதன்கிழமை பாராளுமன்றம் கூடும்போது சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

பிரதமர் திரு ஆர். பிரேமதாசா இச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். வெ

## லெபனானிலுள்ள இலங்கையர்

பெய்ரூட் ஜூலை. 18

லெபனான் யுததத்தினால் அங்கு வாழும் இலங்கையரில் மிகக்குறைந்த தொகையினரே பாதிக்கப்பட்டிருக்கக்கூடுமென பெய்ரூட்டிலுள்ளபிரிட்டிஷ் தூதரக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

லெபனானில் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் தொடர்பாக பெய்ரூட்டிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். வெ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

ஆவரங்கால் சிவன் கோவில் கும்பாபிஷேக விசேட நிகழ்ச்சியாக இன்று மாலை, தமிழக அறிஞர்களான ஔவை நடராஜனும் 'கங்கை' ஆசிரியர் எம், பகீரதனும் சிறப்புரை ஆற்றுவார்கள்.

## இரு பொலிஸார் தற்காலிக வேலைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டை நுழைவாயிலில் பாதுகாப்புச் சேவையிலீடுபட்டிருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடமை நேரத்தில் இவர்களிருவரும் நித்திரையில் ஆழ்ந்திருந்ததை கண்டுபிடித்த யாழ். பொலிஸ் அதிபர் திரு. றிச்சார்ட் விஜயசேகரா இ... யும் தற்காலிக வேலைநீக்கம் செய்துள்ளாராம். (க)

## வேலைநிறுத்தம் முடிவுற்றது

லண்டன் ஜூலை 18

பிரிட்டிஷ் ரயில் சாரதிகள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ]

## பாராட்டு

சுழிபுரம்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சோவியத் யூனியனுக்கு முதல்முறையாக இம்மாதம் செல்வதையிட்டு வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

## கோஷ்டி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. எம். ஏ. தென்னக்கோன் தலைமையில் பொலிஸ் விசாரணை நடைபெற்று வருகிறது.

புதுக்காட்டுச் சந்தியில் தேநீர் கடை தீக்கிரையானதால் சுமார் 46,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கடைஉரிமையாளர் சாவகச்சேரி பொலிஸில் புகார் செய்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் பொலிஸாரும் இராணுவத்தினரும் சம்பவம் நடந்துள்ள கிராமங்களுக்கு சென்றுள்ளனர், [க]

## நிருத்த...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வின் இல்லத்தில் இவ்வரவேற்பு வைபவம் நடைபெற்றது மன்றத்தின் துணைத்தலைவர் திரு. க. சொக்கலிங்கம் [சொக்கன்] பட்டத்தை வழங்கினார். இவ் வைபவத்தில் கோப்பாய் எம்.பி திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் யாழ். மாநகரமுதல்வர் திரு இராசா விசுவநாதன் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.